விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | மலர் : 01 | 15.04.2021 வியாழக்கிழமை | இதழ் : 135 | பக்கங்கள் : 16



06
அரச கூட்டுக்குள் கருத்து மோதல்!



10
24 மணித்தியாலங்களுக்குள் விபத்துக்களால் 11 பேர் பலி!



11
தமிழர் நம்பிக்கை இழக்கக்கூடாது உரிமையை வென்றெடுக்க முடியும்



12
உலகின் மிக நீளமான முயலை இங்கிலாந்தில் காணவில்லை!

## மோ.சைக்கிள் ஓடிய 8 வயது சிறுவன்; ஒன்றரை வயது சகோதரி பரிதாப மரணம்!

### தென்மராட்சியில் புதுவருடத்தன்று சோகம்

யாழ்ப்பாணம், ஏப். 15

தென்மராட்சி - மட்டுவில் பகுதியில் 8 வயதுச் சிறுவன் மோட்டார் சைக்கிளை ஓடிய வேளை அருகில் இருந்த அவரது சகோதரியான ஒன்றரை வயதுக் குழந்தை சில்லுக்குள் சிக்குண்டு இறந்த பரிதாப சம்பவம் புத்தாண்டு தினமாக நேற்று இடம்பெற்றுள்ளது.

மட்டுவில் - துர்க்கைம்மன் கோவில் 15

## ஹிட்லராக மாறமாட்டார் ஜனாதிபதி கோட்டாபய!

கொழும்பு, ஏப். 15

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஹிட்லர் போன்று மாறுவாரென்று நான் ஒரு போதும் நினைக்கவில்லை. ராஜபக்ஷவினர் ஹிட்லருக்கு எதிராக செயல்பட்டவர்கள் என்று முருத்தெட்டுவ ஆனந்த தேரர் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம வெளியிட்ட கருத்து தொடர்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகை 15

# புலம்பெயர் அமைப்புக்களுடன் அமெரிக்கா தொடர்பாடலை தொடர்ந்து மேற்கொள்ளும்

### இலங்கை அரசுக்கு அதிர்ச்சியளித்திருக்கும் இராஜாங்கத் திணைக்களத்தின் அறிவிப்பு

வாஷிங்டன், ஏப்ரல் 15

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த அமைப்புக்களுடன் தமது நாடு தொடர்ந்தும் ஈடுபாட்டை - தொடர்பாடலை கொண்டிருக்கும் என அமெரிக்கா அறிவித்திருக்கின்றது. புலம்பெயர்ந்த அமைப்புக்கள் பலவற்றின் மீது இலங்கை அரசாங்கம் கடந்த மாதம் தடை விதித்திருக்கும் நிலையில் அமெரிக்கா வெளியிட்டிருக்கும் இந்த அறிவிப்பு இராஜதந்திர வட்டாரங்களில் பலத்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இலங்கை அரசுக்கும் இது அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. 15



பிலவ வருடப் பிறப்பு தினமான நேற்று வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் விஷேட திருவிழா இடம் பெற்றது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் இதில் பங்கேற்றனர்.
படம்: ஐங்கரன் சிவசாந்தன்

## மாகாணசபை முறையை ஒழிக்க இடமளியோம்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

வடமராட்சி, ஏப். 15

மாகாணசபை முறையை ஒழிப்பதற்கு நாங்கள் இடம் கொடுக்கமாட்டோம். ஆனால், வெறுமனே இருக்கின்ற மாகாண சபை முறை எங்கள் பிரச்னைக்கு தீர்வு என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். மாகாண சபை முறைமை இருக்கவேண்டும். அது முழு அதிகாரங்களை பெற்றதாக சமஷ்டி கட்டமைப்பில் வடக்கு-கிழக்கு இணைந்த ஆட்சியாக மலரவேண்டும் 15

## கனடா செல்ல முயன்ற இளைஞன் கைது

கொழும்பு, ஏப் 15

போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி கனடா செல்ல முற்பட்ட இளைஞர் ஒருவர் கொழும்பு, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாய் ஊடாக கனடாவுக்குச் செல்ல முற்பட்ட மட்டக்களப்பு 15

## யாழ்ப்பாணத்தில் நேற்று 25 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஏப். 15

யாழ். மாவட்டத்தில் புத்தாண்டு தினமான நேற்று 25 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன், 15

## புத்தாண்டு வாழ்த்து தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி பைடன்

வாஷிங்டன், ஏப் 15

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தமிழ், கேரளா, பெங்காலி, நேபாளி உள்ளிட்ட பல்வேறு தரப்பு மக்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று தனது ருவிட்டர் பக்கத்தில், வைஷாகி, நவராத்திரி, சாங்ரன் மற்றும் வரும் வாரத்தில் புத்தாண்டு கொண்டாடும் தெற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசிய சமூக மக்களுக்கு நானும் ஜில்லும் (பைடனின் மனைவி) வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இனிய பெங்காலி, கம் போடியன், லியோ, மியான் மரிஸ், நேபாளி, சின்ஹலிசி, தமிழ், தாய் (தாய் லாந்து), விஷூ புத்தாண்டு வாழ்த்துகள் என பதிவிட்டுள்ளார்.

## சைக்கிளில் பயணித்த சிறுவர்களான சகோதரர்களை மோதிய ‘படி’ ரக வாகனம்!

### ஒருவர் பலி மற்றையவர் படுகாயம்
### யாழ்.நகரில் புத்தாண்டு தினத்தில் துயரம்

யாழ்ப்பாணம், ஏப். 15

சகோதரர்கள் இருவர் சைக்கிளில் பயணித்தபோது எதிரே வந்த படி ரக வாகனம் மோதியதில் சிறுவன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றைய சிறுவன் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்று காலை 8.45 மணியளவில் நாவலர் வீதி கனகரத்தினம் மகா வித்தியாலயத்துக்கு அருகில் இந்தத் துயரச் சம்பவம் 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாணசபை...

என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

புதுவருட தினமான நேற்று புதன்கிழமை அல்வாய் கிழக்கு, இலகடியில் உள்ள தமிழரசுக்கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற புத்தாண்டு பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்-

இன்றைய தமிழ் சிங்கள புத்தாண்டு இந்நாட்டிலே மக்கள் சந்தோசமாக கொண்டாட வேண்டும் என வாழ்த்துகின்றோம். நாட்டிலே பல விதமான பிரச்னைகள் இருக்கின்றன. பொருளாதார பிரச்னைகள் இப்போது முக்கியமாக மேலோங்கி நிற்கின்றன. இந்த சூழ்நிலையிலே இப்புத்தாண்டு கொண்டாடுவதற்கு வழியில்லாமல் இருப்பவர்களுக்காக நாங்கள் விசேடமாக அவர்களை நினைவு கூருகின்றோம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த புத்தாண்டிலாவது எங்களுக்கு ஒரு விடிவு ஏற்பட வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திக்கின்றோம். பிரார்த்திப்பது மட்டுமல்ல அதற்காக தொடர்ந்து எங்களது பிரயாசையையும் கொடுத்துக் கொண்டேயிருப்போம்.

எங்களுடைய முயற்சி ஒருபோதும் கைவிடப்படமாட்டாது.

அரசாங்கத்துக்குள்ளே மாகாணசபைத் தேர்தல் நடத்துவது பற்றி பெரியதொரு இழுபறி நடந்து கொண்டிருக்கிறது என்று எங்களுக்கு தெரிகிறது. அரசியல் கட்சியாக அவர்கள் அந்த இரண்டாவது நிலையிலேயும் தாங்கள் ஆட்சிகளை கைப்பற்ற வேண்டும் என்று சிந்திக்கிறார்கள். ஆனால் கடும்போக்குவாத பின்னணியை கொண்ட பலர் இந்த அரசாங்கத்தை இந்தத் தடவை பதவிக்கு கொண்டு வந்தவர்கள் -விசேடமாக ஜனாதிபதியின் வெற்றிக்காக உழைத்த இனவாத சிந்தனை உள்ள கடும்போக்குவாதிகள் மாகாணசபை முறை அகற்றப்படவேண்டும் என்று தங்களுடைய நிலைப்பாட்டை தெளிவாக தெரிவிக்கிறார் கள். ஆகையினாலே இந்த இரண்டு தரப்பினர்களுக்கு இடையே நடக்கும் இழுபறி யாருக்கு வெற்றியில் முடியும் என்பதை எங்களால் சொல்ல முடியாதிருக்கிறது.

எங்களைப் பொறுத்தவரையிலே மாகாணசபை முறையை ஒழிப்பதற்கு நாங்கள் இடம் கொடுக்க மாட்டோம். ஆனால், வெறுமனே இருக்கின்ற மாகாணசபை முறை பிரச்னைக்கு தீர்வு என்றும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். மாகாணசபை முறைமை இருக்கவேண்டும். ஆனால் அது முழு அதிகாரங்களை பெற்றதாக ஒரு சமஷ்டி கட்டமைப்பில் வடக்கு-கிழக்கு இணைந்த ஆட்சியாக மலர வேண்டும். அதற்கான எங்களுடைய யோசனைகளை இந்த அரசாங்கம் நியமித்துள்ள குழுவுக்கு முன்வைத்துள்ளோம். அவர்களுடன் நீண்டதொரு கலந்துரையாடல் நடத்தி இருக்கின்றோம். அதற்குப் பிறகும் இரண்டு மூன்று கடிதங்கள் அவர்களுக்கு எழுதியுள்ளோம். ஆகையினாலே எங்களுடைய முயற்சி இது தொடர்பாக தொடர்ந்து நடை பெறும்.

மாகாண சபைத் தேர்தல் மிக விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு.

என்னுடைய பாதுகாப்பு எப்படி இருக்கிறது என்று எனக்கு தெரியாது. அது பாதுகாப்பு தரப்பினருக்குதான் தெரியும். இது அவர்களே நீதிமன்றத்துக்கு முன்பாக பல அறிக்கைகளை முன்வைத்து சொன்ன செய்தி.

பல ஆயுதங்களை கண்டெடுத்து 2019 திலிருந்து ஒரு நீதிமன்ற வழக்கில் இந்த 15 பேரையும் உட்படுத்தி என்னைக் கொலை செய்த முயற்சித்தார்கள் என்றும், வேறுபல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்கள் தடுப்புக் காவலில் இருந்தவர்கள். அவர்களில் 11 பேர் சாட்சிகள் இல்லை என்று சட்டமா அதிபர் சொன்னதாக விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். அதனுடைய பின்னணி எதுவும் எனக்குத் தெரியாது. ஆனால், இதேபோல இன்னும் ஓரிரு வழக்குகள் இருப்பதாக அறிகிறேன்.

ஜனவரி மாதத்தில் பாராளுமன்றத்தில் பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர , சுமந்திரனுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கிறது. நான் அவருக்கு எச்சரிக்கை செய்து இருக்கின்றேன் என கூறினார். பிறகு பெப்ரவரி மாதத்தில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி நடைபயணம் முடிவடைகின்றபோது என்னுடைய விசேட பாதுகாப்பு அகற்றப்பட்டது. அதைப்பற்றி எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது அன்றைய தினம் மூன்று தடவைகள் அவர் திரும்பத் திரும்ப பாராளுமன்றத்தில் கூறினார், அவருக்கு(சுமந்திரனுக்கு) உயிர் அச்சுறுத்தல் இருக்கிறது. எங்களுடைய ஆராய்ச்சியின்படி அவருக்கு இப்போதும் உயிர் அச்சுறுத்தல் இருக்கிறது.

ஆனால், அவர் நடைபயணத்தில் சென்ற காரணத்தால் இதனை நீக்குகிறோம் என்று சொன்னார். ஆகவே, உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது என்று சொல்லிக் கொண்டே விசேட பாதுகாப்பை அவர் நீக்கிய காரணத்தினால்தான், எனக்கு ஏதாவது நடக்குமாக இருந்தால் அவர் பொறுப்பேற்க வேண்டும் என்று அன்றைக்கே பாராளுமன்றத்தில் சொல்லியிருந்தேன். இப்பொழுது என் பாதுகாப்பை நீக்கி என்னை கொலை செய்ய முயற்சித்தார்கள் என்று அவர்களாகவே இரண்டரை வருடங்களாக தடுத்து வைத்திருந்த 11 பேரை விடுவித்துள்ளனர். ஆகவே, அடுத்தடுத்ததாக என்ன நடக்கும் என்று சொல்ல தெரியாது. இதற்கு முழுப்பொறுப்பும் சரத் வீரசேகரவும், ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியிலும், அரசாங்கமும்தான் எடுக்க வேண்டும்-என்றார்.

## புலம்பெயர்...

அமெரிக்கா இராஜாங்கத் திணைக்களம் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், “தெற்காசியப் பிராந்தியத்துடனான எமது தொடர்புகளை தொடர்ந்தும் பேணுவதற்கு புலம்பெயர் சமூகத்தினர் பெறுமதி மிக்க பங்காளிகளாக உள்ளனர். இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் உள்பட தெற்காசிய புலம்பெயர் சமூகத்தினருடன் நாம் தொடர்ந்தும் தொடர்பாடலைக் கொண்டிருப்போம்” எனத் தெரிவித்திருக்கின்றது.

உலகத் தமிழர் பேரவை, பிரித்தானிய தமிழர் பேரவை, கனடிய தமிழ்க் காங்கிரஸ், அவுஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ் உட்பட பல புலம்பெயர்ந்த அமைப்புக்கள் கடந்த மாதம் பாதுகாப்பு அமைச்சினால் தடைசெய்யப்பட்டன. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ணவின் கையொப்பத்துடன் இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. இதனைவிட, பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி, மலேஷியா உட்பட பல நாடுகளில் வசிக்கும் செயற்பாட்டாளர்கள் பலருக்கும் தடை விதிக்கப்பட்டு கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டனர்.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் முடிவுக்கு வந்தவுடன் இந்தத் தடை அறிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட புலம்பெயர் அமைப்புக்கள் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றுவதில் முக்கியமான பங்களிப்பை வழங்கியதாகக் கருதப்படும் நிலையில்தான் அவற்றின் மீது தடை விதிக்கப்பட்டது. இந்த அமைப்புக்களுடன் தொடர்புகளை வைத்திருப்பவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பின்னணியிலேயே புலம்பெயர்ந்த அமைப்புக்களுடன் தமது நாடு தொடர்ந்தும் ஈடுபாட்டை - தொடர்பாடல்களைக் கொண்டிருக்கும் எனவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்திருக்கின்றது. பரஸ்பரம் நலன் தரும் விடயங்களிலான பேச்சுக்கள் தொடரும் எனவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்திருக்கின்றது.

# சீனாவுக்கான இலங்கையின் தூதர் பாலித புதவிக்கான சான்றுகளை கையளித்தார்




பெய்ஜிங், ஏப். 15

சீனாவுக்கான இலங்கையின் தூதர் பாலித கொஹன சீன அதிபர் ஜி ஜின் பிங்கிற்கு தனது பதவிக்கான சான்றுகளைக் கையளித்தார்.

ஜனாதிபதி ஜி ஜின்பிங் 29 நாடுகளின் சீனாவுக்கான புதிய தூதர்களின் பதவிச் சான்றிதழ்களை நேற்று புதன்கிழமை பெய்ஜிங்கில் உள்ள மக்கள் அரங்கில் வைத்துப் பெற்றுக்கொண்டார்.

ஆப்கானிஸ்தான், கிரீஸ்,பொஸ்னியா, மடகாஸ்கர், இத்தாலி, திமோர், சூடான், மொரீஷியஸ், நேபாளம், பாகிஸ்தான், மால்டோவா, டென்மார்க், பெல்ஜியம், ஓமான், தஜிகிஸ்தான், ஐக்கிய இராச்சியம், வெனிசுலா, ஜப்பான் தென்னாபிரிக்கா, இலங்கை, பெலாரஸ், அயர்லாந்து, இஸ்ரேல்,கொரியா ஜனநாயக மக்கள் குடியரசு, ஈராக் மற்றும் ஆர்ஜென்ரீனா ஆகிய நாடுகளின் சீனாவுக்கான தூதர்களே இன்று தமது சான்றிதழ்களைக் கையளித்தனர்.

இதன்போது உரையாற்றிய சீன ஜனாதிபதி,

இந்த ஆண்டு சீன கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்ட 100 வது ஆண்டு நிறைவு பெறுவதாகக் குறிப்பிட்டார். இது சீனாவின் 14 வது ஐந்தாண்டு திட்டத்தின் (2021-2025) முதல் ஆண்டாகும்.

இது சோசலிச நவீனமயமாக்கலுக்கான புதிய பயணத்தைக் குறிக்கிறது. சீனா ஒரு புதிய அபிவிருத்தி தத்துவத்தைப் பின்பற்றி ஒரு புதிய அபிவிருத்தி முன்னுதாரணத்தை வளர்க்கும்.

சீனாவின் வளர்ச்சி அவர்களின் நாடுகளில் உள்ள மக்களுக்குச் சிறந்த பயன் தரும் என்றும் சீன ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## சைக்கிளில்...

இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெயரூபன் மதுசிகன் (வயது-8) என்ற சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரது மூத்த சகோதரனான 12 வயதுச் சிறுவன் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சகோதரர்கள் இருவரும் சைக்கிளில் பயணித்தபோது எதிரே வந்த படி ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

மூத்த சகோதரன் சைக்கிளைச் செலுத்திச் சென்றுள்ளார். பின்னிருக்கையிலிருந்த இளைய சகோதரரன் வீதியின் பக்கம் வீழ்ந்ததால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படி ரக வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நளினி சுதாகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

சாரதியை வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

## யாழ்ப்பாணத்தில்...

வடக்கின் சகல மாவட்டங்களிலுமாக 27 பேர் நேற்று தொற்றாளர்களாக இனங் காணப்பட்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூட அறிக்கையின்படி,

நேற்றைய தினம் 145 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 21 தொற்றாளர்களும், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவர், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தலா ஒருவர் என 25 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேபோன்று, முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனால் வடக்கில் நேற்று மட்டும் 27 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## கனடா செல்ல...

- ஆரையம்பதி பிரதேசத்தில் வசிக்கும் இவர் 24 வயதான இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலை 3.15 மணிக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய் நோக்கி பயணிக்கவிருந்த எமிரேட்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் பயணிப்பதற்காக இவர் விமான நிலையத்திற்கு சென்றிருந்தார்.

அதன் பின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினர் மேற்கொண்ட தொழினுட்ப ரீதியான பரிசோதனையின் போது கனடாவுக்கான கடவுச் சீட்டு போலியான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## ஹிட்லராக...

யில்-

அமைச்சர்கள் பிரபலமடைவதற்காக இவ்வாறு கூறுகின்றார்களா என்பது தெரியவில்லை. உண்மையில் நாம் கண்டிக்கிறோம்.

69 இலட்சம் வாக்குகளும் இதற்காகவே கிடைத்தது என எவரும் பொய் சொல்ல முடியாது. இந்த வாக்குகள் என்னாலேயே கிடைத்தது என்று பிரதமர் மஹிந்த வாயை திறந்து கூறலாம், அவர் மீதான நம்பிக்கையினால்தான் 69 இலட்சம் வாக்குகள் கிடைத்தன.

மேலதிகமாக 5 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. அந்த 5 இலட்சம் வாக்குகள் தற்போது இழக்கப்பட்டுள்ளன. ஹிட்லராக மாறவே வாக்களித்ததாக எவராவது கூறினால் அவர்களுக்கு எமது மக்கள் தகுந்த பதிலளிப்பர் -என்றார்.

## மோ.சைக்கிளை...

பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த துயரச் சம்பவத்தில் கஜேந்திரன் சுவேசனா என்ற குழந்தையே உயிரிழந்தது.

வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த தாயாரின் ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளை 8 வயதுச் சிறுவன் விளையாட்டாக இயக்கியுள்ளார். இதன்போது மோட்டார் சைக்களில் சீறிப் பாய்ந்து கீழே விளையாடிக்கொண்டிருந்த ஒன்றரை வயதுச் சிறுமியின் வயிற்றின் மேல் ஏறியது. இதனையடுத்து சம்பவ இடத்திலேயே சிறுமி உயிரிழந்தார்.

சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட சிறுமியின் சடலம் அங்கிருந்து மரண விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் போதானா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது...!

பாரிஸிலிருந்து ஈழநாடு பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்த காலத்தில் இந்த ஊர்க்குருவி , 'இப்படியும் நடக்கிறது' என்ற இந்தப் பத்தியில் தான் கண்ட அல்லது கேட்ட ஒரு விசயத்தைப் பற்றி ஒரு சிறிய குறிப்பு ஒன்றையே எழுதிக்கொண்டிருந்தது.

தினமும் யாரையாது 'கடி'ப்பதே இந்த ஊர்க்குருவியின் வேலை. அது சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற செய்தி ஒன்றாகவும் இருக்கும்.

லண்டனிலிருக்கும் நண்பர் ஒருவரை எப்போது கண்டாலும், அவர் இந்த ஊர்க்குருவியின் கருத்துக்களைப் பற்றியே பிரஸ்தாபிப்பார்.

பத்திரிகையை வாங்கியவுடன் தான் அந்த பத்தியை பார்ப்பதுதான் முதல் வேலை என்பார்.

ஒரு தடவை ஒரு திருமண வைபவத்தில் அவரைக் கண்டபோது, அவர் கோபத்தில் எதையோ சொல்லிக்கொண்டு எதுவும் பேசாமல் நகர்ந்து சென்றார்.

அதன் பின்னர்தான் ஞாபகம் வந்தது, சில வாரங்களுக்கு முன்னர் அவரைப்பற்றி ஒரு தகவலை ஊர்க்குருவி எழுதியது அவருக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது.

அதாவது இந்த ஊர்க்குருவி வேறு யாரையாவது 'கடி'க்கின்றபோது, பார்த்து மகிழ்ந்த அவருக்கு தன்னைக் 'கடி'க்கின்றபோது பொறுக்கமுடியவில்லை.

ஐ.நா. மனிதஉரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக இந்தப் பத்தியில் எழுதிய கருத்து ஒன்று நண்பர் ஒருவரை ஆத்திரப்படுத்தியிருக்க வேண்டும். ஏற்கனவே ஒரு தடவை இந்தப் பத்தியில் ஒரு தலைவரைப் பற்றி எழுதியிருந்தபோது அதனை பாராட்டியிருந்தவர், இப்போது இன்னுமொரு தலைவரைப்பற்றி குறிப்பிடுகின்ற போது ஆத்திரப்படுகிறார். கூடவே அவர், ஜெனிவாவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதியாக இருந்த தமரா குணநாயகம் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றையும் பார்க்குமாறு கேட்டிருந்தார்.

அப்படி என்னதான் இருக்கிறது என்று அதனைப் பார்த்த போது எதற்காக அவர் இதனை பார்க்கச் சொன்னார் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை.

யுத்தம் முடிவடைந்த பின்னர் கியூபாவுக்கான இலங்கை தூதுவராக பணியாற்றிய தமரா, ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிடி இறுகியபோது இரண்டாயிரத்தி பதினொராம் ஆண்டில் ஜெனிவாவுக்கான இலங்கையின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்தார். பின்னர் இரண்டு ஆண்டுகளில் அங்கிருந்து நீக்கப்பட்டார்.

அவரைப் பொறுத்தவரை இலங்கையை எப்படிப் பாதுகாப்பது என்பதுதான் முக்கிய குறி. ராஜபக்ஷ அரசாங்கத்தால் நியமிக்கபட்ட அவர் அந்த அரசாலேயே நீக்கப்பட்டபோதிலும், அவரது சிந்தனை எல்லாம் இலங்கையை எப்படி பாதுகாப்பது என்பதிலேயே இருக்கிறது என்பதை அந்த பேட்டியைப் பார்த்தபோது தெரிந்தது. அதை எதற்காக என்னைப் பார்க்கச் சொன்னார் நண்பர் என்பது புரியவில்லை.

ஆனால், அவர் சொன்ன ஒரு விடயம் அவருக்கு பிடித்திருக்கலாம்.

அதாவது, ஐ.நா. மனித உரிமை பேரவை எந்தக் காலத்திலும் செய்யாத ஒரு வேலையை இந்தத் தீர்மானத்தில் செய்திருக்கின்றது. அதாவது இலங்கையில் போர்க்குற்றங்கள் நடந்திருந்தால், அதற்கான சாட்சியங்களை, ஆதாரங்களைச் சேர்க்கவிருக்கிறது. இது அவர்களுக்கு அதிகாரம் இல்லாத ஒன்று என்றாலும் செய்திருக்கிறது. இது எல்லாவற்றுக்குமே பின்னணியில் அமெரிக்காதான் இருக்கிறது. அது எம்.சி.சி. ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக இலங்கையை மிரட்டுவதற்கே முயல்கிறது. அதாவது திரட்டப்படும் இந்த ஆதாரங்களை வைத்து குற்றம்செய்தவர்களுக்கு எதிராக தமது நாட்டில் வழக்குகளைப் போடுவதற்கு அவர்கள் முயற்சிக்கலாம். அதுவும் வழக்கு போடுவோம் என்று மிரட்டுவதற்குத்தான் அதனைப் பயன்படுத்துவார்கள் என்கிறார் அவர்.

ஆக, இவ்வாறு ஆதாரங்களை திரட்டினாலும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு அதனை எடுத்துச் செல்லமுடியாது என்பதையும் அவர் கூறத்தவறவில்லை.

எனக்குள் எழுந்த கேள்வி என்னவென்றால், அதனை ஏன் அந்த நண்பர் பார்க்கச் சொன்னார் என்பதுதான்? அதாவது ஜெனிவா தீர்மானத்தால் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை. அந்தத் தீர்மானம் அமெரிக்காவின் நலனுக்காக இலங்கையை மிரட்டுவதையே முக்கிய நோக்கமாக கொண்டது என்பதை அவர் தெளிவாகச் சொல்கிறார்.

அப்படியெனில் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்ற நமது தலைவர்களும் அமெரிக்காவின் நலனுக்காகத்தான் ஆதரிக்கிறார்கள் என்று நண்பர் சொல்ல வருகின்றாரா என்பது புரியவில்லை.!

**- ஊர்க்குருவி.**

# ஆளும் கட்சி எம்.பிக்கள் பிரதமரின் சொந்த இடத்துக்கு சென்று வாழ்த்து

**அம்பாந்தோட்டை, ஏப்.15**

**ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கால்டன் இல்லத்துக்குச் சென்று புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.**



பிரதமரின் சொந்த ஊரான அம்பாந்தோட்டை - தங்கல்லைக்கு நேற்று முன்தினம் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். அத்துடன் அவரிடம் ஆசியும் பெற்றார்கள். புத்தாண்டு பாரம்பரியங்களைப் பேணி, நலம் விசாரிக்க வந்த உறுப்பினர்களுக்குப் பிரதமர் நன்றி தெரிவித்து, உபசரித்துள்ளார். நாட்டின் பாரம் பரியங்களுக்கு முதலிடம் வழங்கி, குடும்பத்தினருடனும் கிராம மக்களுடனும் புத்தாண்டை கொண்டாடுவதாகவும் பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார். (ஐ)

## தந்தையை கொன்ற தனயன்:

# 24 மணி நேரத்தில் நாட்டில் மூன்று கொலைகள் பதிவு!

கொழும்பு, ஏப். 15

நாட்டில் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் 3 கொலைகள் இடம்பெற்றுள்ளன. வெவ்வேறு இடங்களில் இடம் பெற்ற இந்தக் கொலைகளில் பெண் ஒருவரும் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டின் மூன்று வேறுபட்ட பகுதிகளான திஸ்மஹாராம,பொத்துஹர மற்றும் இதோகம ஆகிய பகுதிகளில் இன்று காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் பெண்ணொருவர் உட்பட மூன்று பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

குருநாகல் பொத்துஹெர பொலிஸ் பிரிவில் ரக்கலை பகுதியில் மகனொருவர் அவரின் தந்தையின் கழுத்தை நெரித்துக் கொலை செய்துள்ளார். இந்த சம்பவத்தில், 65 வயது நபர் உயிரிழந்தார். அவரின் மகனான சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

அம்பாந்தோட்டை - திஸ்ஸமஹாராம பகுதியில் பெண் ஒருவர் பொல்லால் தாக்கி கொலை செய்யப்பட்டார். இதில், 48 வயது பெண்ணே உயிரிழந்தார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் பெண்ணின் காத லன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, அநுராதபுரம் இதோ கம பகுதியில் இரு நபர்களின் மோதலில் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். இதில் 45 வயது நபர் உயிரிழந்தார். கள்ளக் காதல் தொடர்பான விவகாரமே இந்தக் கொலைக்கும் காரணம் என்று முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகக் கூறப்பட்டது. (ஐ)

## எட்டு வாகனங்கள் ஒன்றாக மோதி தெற்கு நெடுஞ்சாலையில் விபத்து!

கொழும்பு, ஏப். 15

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் எட்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. இதில், ஒருவர் காயமடைந்தார் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் களனிகம - தொடம்கொட வீதியில் நேற்று முற்பகல் 11 .45 மணியளவில் எட்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது.

இதன் போது வானில் பயணித்த ஒருவர் மாத்திரம் சிறு காயமடைந்தார். வேறு எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை.

எனினும், அந்த பகுதியில் வாகன நெரிசல் காணப்பட்டது. அதிவேக நெடுஞ்சாலையின் பாதுகாப்பு பொலிஸ் பிரிவினர் அதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். அத்துடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)




**காலை**

5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**

1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
15.04.2021 வியாழக்கிழமை
சார்வரி, சித்திரை 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியுமா?

நாட்டின் பொருளாதாரத்தை இந்த ஆண்டு முடிவதற்குள் மீட்டெடுப் போமென, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். சீனாவிட மிருந்து மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன்தொகை பெறப்படவுள்ளது. ஏற்கனவே இணங்கிக் கொள்ளப்பட்ட, ஒரு பில்லியன் கடன்தொகையில் ஒரு பகுதியே ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் அடுத்த பகுதியை விடுவிப்பதற்கு சீனா இணங்கியுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாம் கடன்களை எதிர்பார்க்கவில்லை - அதற்கு மாறாக முதலீடுகளையே எதிர்பார்ப்பதாக தெரிவித்திருந்தார். எனினும், அவர் குறிப்பிட்டது போன்று வெளிநாட்டு முதலீடுகளை பெரி யளவில் ஈர்க்க முடியவில்லை. இந்த நிலையில், இந்த ஆண்டுக்குள் பொருளாதாரத்தை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும்?

கொரோனா பெருந்தொற்றிற்கு பின்னரான சூழலில், உலகளவில் பொருளாதார நிலைமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. செல்வந்த நாடுகளே பொருளாதார பிரச்னைகளினால் பாதிக்கப்பட்டிருக்கும்போது, இலங்கையின் பாதிப்பு தொடர்பில் குறிப்பிட்டுச் சொல்ல எதுவுமில்லை. கொரோனாவிற்கு பின்னரான உலக நிலைமையை சீனா திட்டமிட்ட வகையில் பயன்படுத்திக்கொள்ள முயற்சிப்பதாக உலகளவில் விமர் சனங்கள் உண்டு. இந்த பின்புலத்திலேயே, சீனாவின் பொருளாதார அணுகுமுறை தொடர்பில் மேற்குலக நாடுகள் கடுமையான விமர்சனங் களை முன்வைத்து வருகின்றன. சீனாவின் பொருளாதார திட்டங்கள் இலங்கையின் இறைமையை மோசமான வகையில் பாதித்து வருவதாக அமெரிக்கா எச்சரிக்கைகளை விடுத்துவரும் நிலையில்தான் - மீண்டும், ஒரு மில்லியன் தொகையை இலங்கை கடனாக பெறவுள்ளது. அதே வேளை, சீனாவின் கடன்பொறி இராஜதந்திரத்திற்குள் இலங்கை விழுந்துவிட்டதாகவும் பல அரசியல் அவதானிகளும் எச்சரித்துவரு கின்றனர். சீனா ஏன் இலங்கைக்குள் இந்தளவு ஆர்வம் காட்டுகின்றது? - இதற்கு பின்னால் இருக்கின்ற காரணங்கள் என்ன? - என்பது பற்றியும் சரியான கணிப்புக்கள் இல்லை.

இலங்கையின் பொருளாதாரத்தை பொறுத்தவரையில், இலங்கை அதிகம் உல்லாசத் துறையிலும், தேயிலை ஏற்றுமதியிலுமே தங்கியிருக் கின்றது. ஆனால், ஈஸ்டர் தாக்குதலை தொடர்ந்து இலங்கையின் உல் லாச பயணத்துறை பெருமளவில் பாதிப்படைந்திருந்தது. கொரோனா வினால் முற்றிலும் பாதிக்கப்பட்டது. அண்மைக் காலத்தில் உல்லாச பயணத் துறையை மேம்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. இந்த நிலையில் இலங்கையின் பொருளாதாரத்தை தூக்கிநிறுத்து வதற்கான வாய்ப்புக்கள் மிகவும் மங்கலாகவே தெரிகின்றன. இந்த பின்புலத்தில்தான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கையின் பொருளாதாரத்தை தொழில்துறையை நோக்கி நகர்த்துவதில் தனது கவனத்தை செலுத்திவருகின்றார். ஆனாலும், அதிலும் சவால்கள் உண்டு. ஏனெனில், மனித உரிமைகள் சார்ந்த விடயங்களில் இலங்கை தொடர்பில் - குறிப்பாக, இந்த அரசாங்கம் தொடர்பில், மேற்குலக நாடுகள் மத்தியில் எதிர்மறையான பார்வைகளே உள்ளன. அதேவேளை, இலங்கையின் சர்வதேச நன்மதிப்பு பெரியளவில் வீழ்ச்சியடைந் திருக்கின்றது. குறிப்பாக, மீளவும் ராஜபக்ஷக்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற நிலையில், மனித உரிமைகள் பேரவையின் ஆணை யாளர் கடுமையான அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கின்றார். அதேவேளை, இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்களும் கடுமையான எச்சரிக்கைகளை வெளியிட்டுவருகின்றன. இந்த நிலையில், மேற்குலக முதலீட்டாளர்களை கவருவதில் இலங்கை தொடர் பின்னடைவுகளை சந்திக்கலாம்.

ஆனால், இந்த இடைவெளியை சீனா நிரப்பக் கூடும். ஆனால் சீனா வின் முழுமையான பிடிக்குள் நாடு செல்லுமானால், அப்போதும் கடுமை யான மேற்குலக தலையீடுகளை கொழும்பு எதிர்கொள்ள நேரிடும். இலங்கையின் பொருளாதார நிலைமைகளை பெரியளவில் முடக்கும் வல்லமை மேற்குலகிற்குண்டு. முக்கியமாக, அமெரிக்காவிற்கு உண்டு. இந்த நிலைமைகளை அரசாங்கம் எவ்வாறு கையாளப் போகின்றது என்பதைக் கொண்டே, இலங்கையின் பொருளாதாரம் மீட்டெடுக்கப்படுமா, இல்லையா என்பது தீர்மானிக்கப்படும்.

# அரசியலில் கட்சிகளின் பெயர்களும் இனவாதமும்

**என்.கே. அஷோக்பரன்**




இனம், மதம் ஆகியவற்றின் பெயர்களைத் தன்னகத்தே கொண்ட அரசியல் கட்சி களை, இனிப் பதிவுசெய்ய மாட்டோம் என்று, இலங்கையின் தேர்தல் ஆணைக்குழு, அண்மையில் அறிவித்திருந்ததாகச் செய்திக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு செய்வதற்குத் தேர்தல் ஆணைக்குழுவுக்குச் சட்ட அதிகாரம் இருக்கிறதா என்ற கேள்வி ஒருபுறமிருக்க, இனவாதம் அல்லது மதவாதம் அல்லது இன-மைய அரசியலை மாற்றியமைக்க, கட்சியின் பெயரில் குறித்த இன, அல்லது மதப் பெயரை இல்லாதொழிப்பதுதான் முதற்படி என்ற சிந்தனை ஒன்றில், அறியா மையின் விளைவ் அல்லது, அது வேறு காரணங்களுக்காக முன்னெடுக்கப்பட்ட ஒன்றாகத்தான் பார்க்க வேண்டியுள்ளது.

இலங்கையில் பேரினவாதத்தைத் தோற்று வித்த பெருந்தேசியக் கட்சிகள் எவையும் தமது கட்சிப் பெயரில் இனத் தையோ, மதத்தையோ கொண்டிருந்த தில்லை. பெருந்தேசியவாதத்துக்கும் பேரினவாதத் துக்கும் எதிராகக் கிளர்ந்தெழுந்த சிறுபான் மையினக் கட்சிகளும், சில உதிரி பெருந் தேசியவாத, பேரினவாதக் கட்சிகளும்தான், தமது கட்சிப் பெயரில் இனம் அல்லது மதம் தொடர்பான பெயர்களைக் கொண்டிருக்கின் றன. ஆகவே, இந்தத் தடை, சிறுபான்மை யினக் கட்சிகளைக் குறிவைத்ததாகவே இருக்கிறது என்பது 'வெள்ளிடைமலை'.

இனம், மதம் ஆகிய பெயர்களைக் கட்சி யின் பெயர்களாகக் கொண்ட கட்சிகளைப் பதிவு செய்யாமல் விடுவதன் மூலம், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் பெரும் அடியை எடுத்து வைத்துவிட்டதாகத் தேர்தல் ஆணைக்குழுவும் அரசாங்கமும் எண்ணலாம்.

மனித வாழ்வின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வாக, எண் கணித சாத்திரத்தின்படி பெயரை மாற்றி அமைத்துவிட்டால், பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்பது எவ்வளவு தூரம் உண்மையானதோ, அதுபோலவேதான் இந்த இனம், மதம் தொடர்பான பெயர்களைக் கட்சிப் பெயர் களில் கொண்ட கட்சிகளைப் பதிவு செய்யா மல் விடுவதன் மூலம், இனப்பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்ற நம்பிக்கையும் ஆகும்.

இலங்கை அரசியலைப் புரிந்து கொள்ள முயல்பவர்களுக்கு, இலங்கை அரசியலின் அடிப்படைக்கூறாக இனவாதம், இன - மைய அரசியல் மாறியிருப்பது தெளிவாகத் தெரி யும். அந்த அடிப்படை மாற்றி அமைக்கப் படாமல், இதுபோன்ற அடையாளபூர்வ நடவடிக்கைகளை முன்னெடுப்பதால் எந்தப் பயனுமில்லை.

இந்தப் பெயர்த்தடை என்பது, எப்படி இருக்கிறதென்றால், உள்ளே எத்தகைய கொடும் தேசியவாத, இனவாதச் சிந்தனைகளும் இருக்கலாம் ஆனால், பெயர் பொதுவான தாக இருக்க வேண்டும் என்பதாகவே இருக்கிறது.

வில்லியம் ஷேக்ஸ்பியரின் 'றோமியோ அன்ட் ஜூலியட்'இல் ஓர் அழகான வரி வருகிறது. 'What's in a name? that which we call a rose by any other name would smell as sweet' - 'பெயரில் என்ன இருக்கிறது? நாம் ரோஜா என்று அழைப்பதை வேறு எந்தப் பெயர்கொண்டு அழைப்பினும் அது இனிய மணத்தையே கொண்டிருக்கும்' என்பதே அந்த வரியாகும். ஆகவே, ஒரு பொருளின் பெயரை மாற்றுவது, அதன் தன்மைகளை மாற்றாது.

இங்கு உண்மையான மாற்றம் வேண்டும் என்று எவரேனும் விரும்பினால், மாற்றம் அடிப்படைகளில் ஏற்படுத்தப்பட வேண் டுமே அன்றி, வெறும் பெயர்களை மாற்றுவ தால் எதுவும் மாறப்போவதில்லை. உலகில் மிகப்பெரிய இனவாதக் கட்சிகள் பலதும், தம்முடைய பெயரில் குறித்த இனத்தின், மதத்தின் பெயர்களைக் கொண்டிருக்க வில்லை என்பது அவதானத்துக்கு உரியது.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில், அரசியல் பரப்பின் ஓரங்களில் கிடந்த பேரின வாத, பெருந்தேசியவாத அரசியலை, அரசியலின் முன்னரங்குக்குக் கொண்டுவந்த வர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க ஆவார். பிரித்தானிய பேரரசிலிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றுக்கொண்ட கால கட்டத்தில், இலங்கையில் பௌத்த பிக்கு களின் அரசியல் பிரவேசத்துக்கு, மகாசங்கத் துக்கு உள்ளேயும், பௌத்த மக்களின் பிரதான அமைப்புகளும் பிரதான அரசியல் கட்சிகளும் தொடர்ந்து எதிர்ப்பை வெளியிட்டு வந்தன.

குறிப்பாக, டி.எஸ். சேனநாயக்க தலைமை யிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம், பௌத்த பிக்குகள் அரசியலில் நேரடியாக ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டியது. மாறாக, சமூக நல்வாழ்வுக்காக அவர்கள் உழைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியது. இந்த வலியுறுத்தலின் பின்னால், கௌதம புத்தர் போதித்த பௌத்தத்தின் தாற்பரியம் முன்னி றுத்தப்பட்டது.

பௌத்த பிக்குகள் அரசியலில் ஈடுபடு வதை, கௌதம புத்தர் ஒருபோதும் அனு மதித்தற்கான பதிவுகள் இல்லை. ஆகவே, மகாசங்கத்தினதும் அரசியல் கட்சிகளினதும் பௌத்த பொது அமைப்புகளினதும் இந்த

(04ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 15 வியாழக்கிழமை
பிலவ வருடம் - சித்திரை - 2
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : அதிதி

## இன்றைய ராசிபலன்

15.04.2021

**மேடம்**
விலகியிருந்த உறவினர்கள் இன்று வலிய வந்து பேசுவார்கள். வீட்டில் கலகலப்பான சூழல் நிலவும். மகிழ்ச்சி அதிகரிக்கும். சக பணியாளர்களுடன் இருந்த பிணக்கு விலகும்.

**இடபம்**
நினைத்ததை முடிக்கும் நாள். பணியாளர்கள் நிம்மதி காண்பீர்கள். பிள்ளைகள் பற்றிய மனக் குறைகள் அனைத்தும் நீங்கும். மனதிற்கு பிரிய மானவர்கள் உங்களை தொடர்பு கொள்வார்கள்.

**மிதுனம்**
இன்று குழந்தைகள் நலனில் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரிகளுக்கு முதலீட்டை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும். பணி பற்றிய முயற்சி களில் வெற்றி கிடைக்கும்.

**கடகம்**
தேவைகள் நிறையும். எதிர்க் கருத்துடையவர்கள் மாறுவர். பணியிடத்தில் எதிர்பாலினத்தினரால் ஏற்பட்ட பிரச்னைகள் அகலும். சொத்து பிரச்னை தீரும். உறவினர் வீட்டில் விசேஷம் நடக்கும்.

**சிம்மம்**
விரும்பிய விஷயத்தைச் சிறு சிறு தடைகளுக்குப் பின் முடிப்பீர்கள். குடும்பத்தில் முன்பைவிடவும் கலகலப்பான சூழ்நிலை உருவாகும். வெளிநாட்டில் வசிக்கும் உறவினர் நல்ல செய்தியை தருவர்.

**கன்னி**
வீட்டில் சுபநிகழ்ச்சி நடைபெறும். நல்ல மாற்றம் ஏற்படும். பணியிடத்தில் திட்டமிட்ட விஷயத்தை செய்வதில் அக்கறை தேவை. பிறரை விமர்சிப்பதால் இன்று பிரச்னைகள் ஏற்படக்கூடும்.

**துலாம்**
பெரியவர்கள், மேலதிகாரியிடம் பக்குவமாகப் பேசவேண்டும். பொதுநல ஈடுபாடு கூடும். மேலதி காரி உங்களை பாராட்டுவார். வியாபாரம் சீராகும். தடைபட்ட விஷயம் நல்லபடியாக முடியும்.

**விருட்சிகம்**
பணியில் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம். நிதி, பணி வளர்ச்சிக்கு நண்பர்கள் உதவி செய்வார்கள். பல காலம் பட்ட பாட்டுக்கு நல்ல பலன் கிடைத்து மகிழ்வீர்கள்.

**தனுசு**
மறதியால் அவதிகளுக்கு ஆட்படக்கூடும். புதிய விஷ யம் கற்பீர்கள். மேலதிகாரிகளைப் புரிந்து கொள்வீர் கள். நீண்ட நாள் கவலை தீரும். விரயங் கள் குறைய விழிப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டும்.

**மகரம்**
இடமாற்றம் செய்யும் எண்ணத்தை மாற்றிக் கொள்வீர்கள். உறவினர்களுக்கு கொடுத்த வாக் கைக் காப்பாற்றுவீர்கள். மகிழ்ச்சியும் வருத்தமும் கலந்திருக்கும். எதிரிகள் மனம் மாறுவர்.

**கும்பம்**
கடன் பாக்கிகளை வசூலிப்பதில் இருந்த தடைகள் தீரும். எடுத்த பணியை முடிப்பீர்கள். தந்தையின் ஆரோக்கியம் சீராகும். சாதாரண நாள். உயர்ந்த மனிதர்களின் ஒத்துழைப்பு உண்டு.

**மீனம்**
வீட்டிற்கு தேவையான பொருள் ஒன்றை வாங்கு வீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். பயணத் திட்டம் தீட்டுவீர்கள். பணியாளர்களுக்கு நிதி நிலைமை நிம்மதி தரும். நன்றி உணர்வு வரும்.

# அமெரிக்க தலையீட்டை கோரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

*வவுனியா, ஏப். 15*

தமிழர்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கு அமெரிக்காவின் தலையீட்டை பகிரங்கமாக கோருவதாக வவுனியாவில் கடந்த 1515ஆவது நாளாக தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணா மல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வருடப்பிறப்பான நேற்று அவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போதே இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

2009 முதல் காணாமல் ஆக்கப்பட்ட ஒரு குழந்தையை கூட நாங்கள் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றதிலிருந்து, இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதன் மூலம் எந்தவொரு தீர்வையும் காணமுடியாது என்பதை நாங்கள் நிச்சயமாக கண்டறிந்துள்ளோம்.

எந்தவொரு தீர்வையும் அடைய தமிழர்களுக்கு மூன்று தடுப்புக்கள் உள்ளன. முதலாவது புத்த மதகுருக்கள், இரண்டாவது சிங்கள அரசியல் வாதிகள், இறுதியாக சிங்கள பொதுமக்கள் அவர்கள் எப்போதும் இனவெறி அரசியல் வாதிகளையே பதவிக்கு தேர்ந்தெடுக்கிறார்கள்.

பெப்ரவரி 2017 முதல், எங்கள் போராட்டத்தில் இலங்கையில் அமெரிக்காவின் ஈடுபாட்டைக் கேட்டு வருகிறோம். இலங்கைக்கான அமெரிக்க அழைப்பை பெரும்பாலான அரசியல்வாதிகள் மற்றும் தமிழ் சிந்தனையாளர்கள் அனைவரும் நிராகரித்தனர். இப்போது, அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும், சிந்தனையாளர்களும் ஐ.நாவில் அமெரிக்காவின் தலையீடு முக்கியமானது என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள்.



எனவே அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் தமிழர்களுக்கு அரசியல் ரீதியாக உதவவும், காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் அன்புக்குரியவர்களை கண்டுபிடிப்பதற்கும் அமெரிக்க உதவியை பகிரங்கமாகக் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நாளில், சிங்கள இனப் படுகொலை மற்றும் ஒடுக்கு முறையிலிருந்து தமிழர்களை மீட்க அமெரிக்க உதவியை நாம் அனைவரும் கூட்டாக கேட்கிறோம்.

இலங்கையில் அமெரிக்க தலையீட்டை கேட்டு, ஆயிரக் கணக்கான அமெரிக்கக் கொடிகளுடன் பொத்துவில் முதல் பொலிகண்டி வரை மற்றொரு பெரிய ஆர்ப்பாட்டம் தேவை என்பதை தமிழ் தலைவர்கள் உணரவேண்டும். இல்லையெனில், இந்த தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழர்களுக்கு அல்ல, மாறாக அவர்களின் சுகபோக நல்வாழ்வுக்கும் அவர்களின் அதிகாரத்துக்கும் மட்டுமே - என்றனர்.

# அரசியலில் ஏதோ...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாடு, கௌதம புத்தரின் போதனைகளை அடியொற்றியதாக இருந்தது என்றால் அது மிகையல்ல.

பௌத்த பிக்குகளின் அரசியல் பணி என்பது, ஆள்வோருக்கு அறிவுரை வழங்குதல் ஆகும். இதைக் கௌதம புத்தரே முன்னெடுத் திருக்கிறார். 'தச ராஜ தர்ம' என்பது, ஆட்சிக்கான தர்மம் தொடர்பில், கௌதம புத்தர், அரசர்களுக்கு வழங்கிய அறிவுரை ஆகும்.

நிற்க! சேனநாயக்கர்களின் பின்னர் வந்த ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியிலும், இதே நிலைப்பாடு தொடர்ந்தது. சேர். ஜோன் கொதலாவல பிரதமராக இருந்தபோது, "அரசியலில் ஈடுபடும் பிக்குகளுக்குத் தார் பூசப்படும்" என்று அச்சுறுத்தியதாக, இலங்கையின் புகழ்பூத்த சிவில் சேவை உத்தியோகத்தர்களில் ஒருவரான ப்ரட்மன் வீரக் கோன், தனது நூலொன்றில் பதிவுசெய்திருக்கிறார்.

ஆனால், பௌத்த பிக்குகளிடம் அரசியல் ஈடுபாட்டை வலியுறுத்தும் செயல்பாட்டை 'வித்யாலங்கார பிரிவேன' முன்னெடுத்தது. வள்பொல ராஹூல உள்ளிட்டவர்களின் எழுத்துகளும் இதை ஊக்குவிப்பனவாக அமைந்தன. இதன் விளைவாகத் தீவிர சிங்கள-பௌத்த தேசியவாத சிந்தனை கொண்ட பிக்குகளின் அமைப்புகள் உருவாகின.

ஆனால், அரசியலில் அவர்களுக்கு உரிய களம் இன்னும் கிடைக்கவில்லை; மகாசங்கமும் இந்தப் பிக்குகளை ஏற்று அங்கிகரிக்கவில்லை. இதனால், அரசியலின் புறவட்டத்திலேயே இவர்களின் செயல்பாடுகள் முடங்கியிருந்தன.

இவ்வாறு, அரசியலின் புறவட்டத்தில் இருந்து, தீவிர சிங்கள-பௌத்த தேசியவாத அரசியலை முன்னெடுத்த பிக்குகளை, அரசியலின் மைய அரங்கில், தனது 'பஞ்சமா பலவேகய'வில் (ஐம்பெரும் சக்திகளில்) ஒன்றாக்கிக் கொண்டு வந்து இருத்தியவர் பண்டாரநாயக்கதான். அதற்கு அவர், 'சிங்கள' 'பௌத்த' போன்ற பெயர்களை வைக்க வேண்டிய அவசியம் இருக்க வில்லை. அவர், 'ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி' என்று தான், தனது கட்சியை அடையாளப்படுத்திக் கொண்டார்.

சிங்கள-பௌத்த பெருந்தேசியவாதத்தை, அரசியல் வெற்றி என்ற தனது ஒரே தேவைக்காக முன்னெடுத்த பண்டாரநாயக்க, அதே பெருந்தேசியவாதத்தின் கைகளால் மரணித்த வரலாறு, அனைவரும் அறிந்ததே!

ஆனால், பண்டாரநாயக்கா, அரசியல் முன்னரங்குக்கு அலங்கரித்து, ஆராத்தியெடுத்து அன்று கொண்டு வந்து ஆட்சியில் அமர்த்திவிட்டுச் சென்ற பேரினவாத பெருந்தேசிய அரசியல், அன்றிலிருந்து இன்றுவரை, இந்நாட்டை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. இதுதான், 'பண்டாரநாயக்கா இந்த நாட்டுக்குத் தந்த சாபம்' எனலாம். இதை மாற்றியமைக்கும் வலுவோ, திறனோ, அதன் பின்னர் வந்த எந்தத் தலைமைக்கும் இருக்கவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானதும் கவலைக்குரியதுமாகும்.

பண்டாரநாயக்க காலம் முதல் இலங்கை அரசியல், 'சிங்கள - பௌத்த பெருந்தேசியவாதம்' எதிர் 'தமிழ்த் தேசியவாதம்' என்று இனம் (இனம், மதம்) சார்ந்த தேசிய அரசியலாக மாற்றமுற்றது.

சில தசாப்தங்களின் பின்னர், முஸ்லிம் அரசியல் சிறுபான்மையின அரசியலாகவும் மறுபுறத்தில், இந்திய வம்சாவளியினரின் அரசியல் தனியானதாகவும் இனரீதியில் பிளவடைந்த அரசியலாக, இலங்கை அரசியல் முற்றாக மாற்றமடைந்தது.

'தமிழ்த் தேசியம்' ஒரு தற்காப்புத் தேசியமாக உருவெடுத்தாலும், காந்திய வழிகளைப் பின்பற்றியதாக ஆரம்பத்தில் இருந்திருந்தாலும், தமிழர்களின் அரசியலை உணர்ச்சிவசப்பட்ட, பகட்டாரவார அரசியலாகக் கொண்டு சென்று, இளைஞர்களை உசுப்பிவிட்டு, கடைசியில் ஆயுதக்குழுக்களிடம் தமிழர் அரசியலை முற்றாகச் சரணடையச்செய்துவிட்ட அரசியலாகவே மாறியது.

இன்று அந்த ஆயுதக்குழுக்கள் இல்லாது போய், முப்பது வருடகால யுத்தம் நிறைவுக்கு வந்து, பன்னிரண்டு ஆண்டுகள் ஆகப்போகும் நிலையிலும், அந்த ஆயுதக்குழுக்களின் அரசியலைத்தாண்டிச் சிந்திக்கும் அரசியல் சிந்தனை மாற்றம், தமிழ் அரசியல் பரப்பில் ஏற்படவில்லை.

பண்டாரநாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஜெயவர்தனா, ராஜபக்ஷர்கள் வரை, பண்டாரநாயக்கா தொடங்கிவைத்த பெருந்தேசியச் சிந்தனை மாறாதது போலவே, இலங்கை தமிழ் மக்களுடைய அரசியலிலும் ஆயுதக்குழுக்களால் முன்னிறுத்தப்பட்ட குறுந்தேசியவாதச் சிந்தனைகளும் இன்னும் மாறவில்லை.

இதில் ஒரு கருத்துச் சரி, மற்றைய கருத்துப் பிழை என்று எவருக்கேனும் தோன்றுமானால், அதுதான் இந்தநாட்டின் அரசியலில் காணப்படும் பிரச்சினை என்பதை, அந்த எண்ணம் நிரூபிப்பதாக அமையும்.

இனம், மதம் ஆகியவை சார்ந்து, தேசியவாத அடிப்படைகளில் கட்டமைந்த அரசியல் சிந்தனைகளும் அதன்பாலான அரசியல் கட்டமைப்புகளும் மாறாதவரை, வெறும் பெயர்களைத் தடைசெய்வதால் இங்கு எதையும் மாற்றிவிட முடியாது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 இஸ்லாமிய அமைப்புக்களுக்கு தடை; வர்தமானி அறிவித்தல் வெளியானது

கொழும்பு, ஏப். 15

**11 இஸ்லாமிய அமைப்புகளை தடை செய்வதாக தெரிவித்து, வர்த்தமானி அறிவித்தல் ஒன்றினை புதன்கிழமை நள்ளிரவு அரசாங்கம் வெளியிட்டுள்ளது.**

குறித்த அமைப்புகளை தடைசெய்வதற்கான அனுமதியினை சட்ட மா அதிபர் கடந்த வாரம் வழங்கியிருந்த நிலையிலேயே, தற்போது அந்த அமைப்புகளை தடைசெய்யும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் வெளியாகியுள்ளது.

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ், 11 அமைப்புகளும் தடைசெய்யப்படுவதாக, அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தடை விதிக்கப்பட்டுள்ள அமைப்புகள்

1. ஐக்கிய தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (UTJ)
2. சிலோன் தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (CTJ)
3. சிறீலங்கா தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (SLTJ)
4. அகில இலங்கை தௌஹீத் (தௌஹீத்) ஜமாஅத் (ACTJ)
5. ஜம்மியதுல் அன்ஸாரி சுன்னதுல் மொஹமதியா (JASM) மறுபெயர் ஜம்மா அத் அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹமதியா ஒழுங்கமைப்பு மறுபெயர் அகில இலங்கை ஜம் - ஈ - அது அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹம்மதியா மறுபெயர் அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹம்மதியா கழகம் மறுபெயர் ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னதில் மொஹம்மதியா
6. தாறுல் அதர் மறுபெயர் ஜாமிஉல் அதர் பள்ளிவாசல் மறுபெயர் தாறுல் அதர் குரான் மத்ரச மறுபெயர் தாறுல் அதர் அத்தபாவிய்யா
7. சிறீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் (SLISM) மறுபெயர் ஜம்இய்யா
8. இராக் மற்றும் சிரியா இஸ்லாமிய அரசு (ISIS) மறுபெயர் அல் - தௌலா அல் - இஸ்லாமியா தௌலா இஸ்லாமியா
9. அல்கய்தா அமைப்பு
10. சேவ் த பேர்ள்ஸ் அமைப்பு மறுபெயர் சேவ் த பேர்ள் சங்கம்
11. சுப்பர் முஸ்லிம் அமைப்பு

ஆகியவை நேற்று நள்ளிரவு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தடைசெய்யப்பட்டுள்ளன.

நாட்டின் சமாதானத்தைத் தொடர்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு நன்நோக்குடனும் தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் சட்டவாட்சி என்பவற்றின் நலனிலும் மேற்கொள்ளப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளை முன்னெடுப்பதில், மேற்படி அமைப்புகள் தடைசெய்யப்படுவதாக அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## காலநிலையில் திடீர் மாற்றம்!

கொழும்பு, ஏப். 15

சப்ரகமுவ, மத்திய, மேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## 38 அரச சார்பற்ற அமைப்புக்கள் குறித்து அரசாங்கத்தால் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 15

38 அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பில் அரசாங்கத்தால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் 21 தாக்குதலுக்கு பின்னர், இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான பொதுச்செயலாளர் காரியாலயத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி ராஜா குணரத்ன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ், அடிப்படைவாதத்துடன் தொடர்புடைய 11 இஸ்லாமிய அமைப்புக்கள் நாட்டினுள் தடை செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ள அமைப்புக்களில், 3 அரச சார்பற்ற நிறுவனங்களும் அடங்குவதாக அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான பொதுச் செயலாளர் காரியாலயத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

## அரசியல் பழிவாங்கல் விசாரணை குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த திட்டம்!

### பாராளுமன்றில் 21ஆம் திகதி முன்வைக்கப்படும்

கொழும்பு, ஏப். 15

2015 ஜனவரி 8 ஆம் திகதி முதல் 2019 நவம்பர் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்றவை என் கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான யோசனை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் எதிர்வரும் 21 ஆம் திகதி மேற்படி யோசனை சபையில் முன்வைக்கப்படும் எனத் தெரிய வருகின்றது. அத்துடன், இந்த விவகாரம் தொடர்பில் ஏப்ரல் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் விவாதம் நடத்தப்படலாம் எனவும் அறியமுடிகின்றது.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையானது அரசியல் உள்நோக்கம் கொண்டது எனவும், எதிரணி உறுப்பினர்கள் 10 பேரின் குடியுரிமையைப் பறிப்பதற்கான யோசனைகூட அதில் உள்ளது எனவும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

குறித்த ஆணைக்குழு நீதிமன்ற அதிகாரத்தைக்கூட சவாலுக்குட்படுத்தியுள்ளதால் பரிந்துரைகள் அமுலாவதைத் தடுப்பதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளையும் எதிரணி மேற்கொண்டுள்ளது.

(ஐ)



## இலங்கைக்கு ட்ரோன்களை அன்பளிப்பு செய்தது ஆஸி.!

கொழும்பு, ஏப். 15

ஆட்கடத்தலை கண்காணிப்பதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் இலங்கைக்கு 5 ட்ரோன்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கிடையில் இடம்பெறும் ஆட்கடத்தல்கள் மற்றும் இயற்கை சீற்றங்கள் குற்றவியல் விசாரணைகளை கண்காணிப்பதற்காக இவ்வாறு ட்ரோன் கருவிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவுஸ்திரேலியாவுடன் ஒன்றிணைந்து செயற்படுவதனால் சட்டவிரோத குடியேறிகள் மற்றும் ஆட்கடத்தல் கடத்தல்காரர்கள் அடையாளங்காணமுடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாகவும் அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.




## 300 மாணவர்களுக்கு புத்தாடைகள் வழங்கல்!

மட்டக்களப்பு, ஏப். 15

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் இயங்கி வரும் சமூக நலன்புரி அமைப்பு கடந்த 25 ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல்வேறுபட்ட மனிதாபிமான பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்த அமைப்பு, மட்டக்களப்பு மாவட்டத்தில் தந்தையை இழந்து குடிசைகளில் வாழும் 300 மாணவர்களின் கல்விக்கு உதவும் திட்டம் ஒன்றை கடந்த ஆண்டில் ஆரபித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று நாட்களில் 300 மாணவர்களுக்கு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு புதிய உடைகள் வழங்கி வைக்கப்பட்டன என்று இந்த நிறுவன இணைப்பாளர் திருமதி சிவசுந்தரி பிரபாகரன் தெரிவித்தார். (ஐ)

## திருநெல்வேலியில் 21 பேருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், ஏப். 15

திருநெல்வேலி சந்தை மற்றும் அதன் கடைத் தொகுதி உட்பட நல்லூர் மருத்துவ அதிகாரி பிரிவில் 21 பேருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ். போதனா வைத்திய சாலையில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிய வந்தது.

திருநெல்வேலி சந்தை மற்றும் அதன் கடைத் தொகுதிகளை சேர்ந்தவர்களுக்கு நேற்று முன்தினம் மாதிரிகள் எடுக்கப்பட்டன. இவை நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே 21 பேருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

தொற்றுக்கு உள்ளானவர்களில் பெரும்பாலானவர்கள் முன்னர், கண்காணிப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட பாற்பண்ணை கிராமத்தை சேர்ந்தவர்கள் என்று தெரிய வருகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச கூட்டுக்குள் கருத்து மோதல்!

## ஒப்புக்கொண்டார் மஹிந்தானந்த



**கொழும்பு, ஏப். 15**

**"அரச கூட்டணிக்குள் கருத்து மோதல் இருப்பது உண்மைதான். மாகாண சபைத் தேர்தலை முறைமை தொடர்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுன முன் வைத்த திட்டத்துக்கு பங்காளிக்கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. எனவே, 19 ஆம் திகதி பிரதமர் தலைமையில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. அதன்பின்னர் சுமூக நிலை உருவாகும்." - என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

அரச கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள மோதல் நிலை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

"சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரச கூட்டணியில் பல கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. ஒவ்வொரு கட்சிக்கும் கொள்கைகள் இருக்கின்றன. எனவே, கொள்கை ரீதியிலான முரண்பாடொன்றை தற்போது ஏற்பட்டுள்ளது. அதுவும் குறிப்பாக மாகாணசபைத் தேர்தலை மையப்படுத்தியே அந்த பிரச்னை எழுந்துள்ளது.

70 இற்கும் 30 என்ற அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கான திட்டம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒரு தொகுதியில் ஒரு கட்சி மூவரை நிறுத்தலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த யோசனைக்கே பங்காளிக் கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இது தொடர்பில் பேச்சு நடத்தி இணக்கப்பாடொன்றுக்கு வரமுடியும் என நம்புகின்றோம். பிரதமர் தலைமையில் 19 ஆம் திகதி நடைபெறும் சந்திப்பில் இணக்கப்பாடு எட்டப்படலாம்.

மாகாணசபைகளுக்கான தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். ஒன்றாக இணைந்தே மே தினம் அனுஷ்டிக்கப்படும். பங்காளிக் கட்சிகள் தனியாக நிகழ்வுகளை நடத்தமாட்டா. கருத்து மோதல் பேச்சு மூலம் தீர்க்கப்படும். கூட்டணியாக முன்னோக்கி பயணிப்போம்." - என்றார்.



# சாவகச்சேரி மகளிர் கல்லூரி கணனிக்கூடம் உடைப்பு!

*பல இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் அபகரிப்பு*



யாழ்ப்பாணம், ஏப். 15

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள கணனி ஆய்வுகூடம் உடைக்கப் பட்டு உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளமை நேற்றுமுன்தினம் மாலை அவதானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மதியம் பெய்த மழைக்கு பின்னரே இந்த சம்பவம் நடந்துள்ளமைக்கான சான்றுகள் பெறப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

அன்றாட பாவனையிலுள்ள கணனிகள், பல்லூடக எறிகாட்டி மற்றும் அச்சுப்பொறிகள் உள்ளடங்கிய பெறுமதியான பொருட்கள் திருடப் பட்டுள்ளன. அத்துடன். இன்னும் ஒரு தொகுதி பொருட்கள் பொதி செய்யப் பட்டு கொண்டு செல்வதற்கு ஆயத்த நிலையில் வைக்கப் பட்டுள்ள மையும் கண்டறியப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபரினால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலைத் தொடர்ந்து அங்கு வருகை தந்த பொலிஸார் ஆரம்ப கட்ட விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மரண அறிவித்தல்



**மலர்வு:- 16.09.1988**
**உதிர்வு:- 12.04.2021**

## நிசாந்தன் இராஜகுலேந்திரன்

யாழ். கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நிசாந்தன் இராஜகுலேந்திரன் அவர்கள் 12-04-2021 திங்கட்கிழமை அன்று அகாலமரணம் அடைந்தார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார், இராஜகுலேந்திரன்(பெரியண்ணை) பரமேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மகனும், ராஜாஜி, மதன்ராஜ், மதுரா, கிரிசாந் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பிரவீன், அஸ்வின் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ராஜலிங்கம், உதயகுமார் ஆகியோரின் அன்புப் பெறாமகனும், பராசக்தி அவர்களின் பாசமிகு மருமகனும், பிரபாகரன், வதனி ஆகியோரின் அன்புப் பெறா மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (15-04-2021) வியாழக் கிழமை முற்பகல் 10:30 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : பிரபாகரன் குடும்பம்**

முகவரி:-
இல.29, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு:**
**கிரி (தம்பி) - 077 259 1276**
**மதன் (சகோதரர்) - 076 782 4084**
**மதுரா (சகோதரி) - 077 046 9435**
**பிரபா (சித்தப்பா) - +16043258840**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு முதல்வர் வேட்பாளராக வேலன் சுவாமியை இறக்கலாம்

## விக்னேஸ்வரன் எம்.பி. கருத்து

யாழ்ப்பாணம், ஏப். 15

“வடக்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சராக அனைத்துக் கட்சிகளும் இணங்கினால் வேலன் சுவாமியை களமிறக்கலாம்” என வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியின்போது கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் சி.வி.விக்னேஸ்வரன் மேலும் விவரம் தெரிவிக்கையில்,

“வேலன் சுமாமிகளை ஒரு பொது வேட்பாளராக முதல்வர் பதவிக்கு நிறுத்த ஏனைய கட்சிகளும் ஏற்றுக் கொண்டு இணங்கினால் அது தொடர்பில் நாமும் பரிசீலிக்கலாம்” எனப் பதில் அளித்தார்.

அதேநேரம் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவை முதலமைச்சர் வேட்பாளராக ஏற்றுக் கொள்வீர்களா என்ற வினாவுக்கு பதிலளிக்கும்போது, “மாவை. சேனாதிராசா எனது நண்பர், ஆனால், முதலமைச்சர் பதவிக்கு அவர் பொருத்தம் அற்றவர், மாவை சேனாதிராசா முதலமைச்சருக்குப் பொருத்தமற்றவர் என்பதனாலேயே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அன்றே என்னைத் தேர்வு செய்தார்” என்றார் விக்னேஸ்வரன்.

# வேலன் சுவாமிகள் பொது வேட்பாளரா?

## ஆளுமையுள்ள தலைவரே தேவை என்கிறார் சிறிகாந்தா

யாழ்ப்பாணம், ஏப். 15

எதிர்வரும் வடமாகாண சபை தேர்தலில் பொது முதலமைச்சர் வேட்பாளராக வேலன் சுவாமிகளை நிறுத்தலாமென க.வி.விக்னேஸ்வரன் கூறியிருப்பது அவரது சொந்தக்கருத்து. எனினும், வடக்கு-கிழக்கில் நிர்வாக ஆளுமையும், நடைமுறை அரசியலை கையாள தெரிந்த ஒருவருமே முதலமைச்சர் வேட்பாளராக வேண்டுமென தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பங்காளிக்கட்சிகளில் ஒன்றாக தமிழ் தேசிய கட்சியின் தலைவர், மூத்த சட்டத்தரணி என். சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாகாணசபை தேர்தலில் பொது முதலமைச்சர் வேட்பாளராக வேலன் சுவாமிகளை களமிறக்கலாமென, தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் என்.சிறிகாந்தாவை தொடர்பு கொண்டு வினவிய போதே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் வாழ்வும், வாழ்விடமும் தொடர்ந்தும் பாரிய சவால்களுக்கும், நெருக்கடிகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகிக் கொண்டிருக்கும் சூழலில், தமிழ் தேசிய சக்திகள் அனைத்தும் ஒரு பொதுவான அரசியல் செயல் திட்டத்தின் அடிப்படையில் ஓரணி திரண்டு, ஒற்றுமையுடன் செயற்படுவதே இன்றைய அவசர, அவசிய தேவையாக உள்ளது.

இந்த நிலையில் மாகாண சபைத் தேர்தலை பற்றி திட்டவட்டமாக இப்பொழுது எதையும் தமிழர் தரப்பிலிருந்து இப்பொழுது கூற முடியாதுள்ளது. முதலில் தேர்தல்கள் நடத்துவது தொடர்பில் அரசு ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

அடுத்தது, தேர்தல் முறை மாற்றமென்ற பெயரில் தேர்தலை நடத்தாமல் தொடர்ந்து காலம் தாழ்த்தாமல், மிக விரைவாக தேர்தலை நடத்த வேண்டும்.

இது இரண்டும், இன்று பதில்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் கேள்விகளாகும்.

தேர்தல் அறிவிக்கப்படும் போது. அது தொடர்பில் தமிழ் தேசியக் கட்சிகள் இணைந்து செயற்படுவது பற்றி நாம் பேசி ஒரு முடிவுக்கு வர முடியும்.

மாகாணசபை முறைமை என்பது, அது கொண்டு வரப்பட்ட 1987ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து தொடர்ந்து தாக்குதலுக்குள்ளாகி வருகிறது. மாகாணசபையின் அதிகாரங்கள் மெல்லமெல்ல, அதேநேரம் உறுதியாக அரித்து எடுக்கப்படுகிறது.

எம்மை பொறுத்தவரை 13ஆவது அரசியல் திருத்தத்தின் கீழ் மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களும் அவற்றுக்கு முழுமையாக வழங்கப்படவேண்டுமென்பதில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் அனைத்தும் திட்டவட்டமாகவும் உறுதியாகவும் நிற்கவேண்டும்.

மாகாணசபை முறைமை என்பது தமிழினத்தின் அபிலாசைகளுக்கான தீர்வு அல்ல. ஆனால் அது ஒரு திட்டவட்டமாக ஆரம்பம். இருளில் சிக்கிக் கொண்டுள்ள ஓர் இனம் என்ற முறையில், வானத்து நிலவினை வரவேற்க காத்துக் கொண்டிருக்காமல், உடனடியாக கையிலுள்ள மெழுகு வர்த்திகளையாவது எரிய வைக்க நாம் நடவடிக்கையெடுக்க வேண்டும்.

தூர சிந்தனையுடனும், நடைமுறை சாத்தியமான அரசியல் அணுகுமுறையுடனும், கடந்த காலங்களில் 70 ஆண்டுகளிற்கு மேலாக சிந்தித்து செயல்பட காலத்திற்கு காலம் வந்த தமிழ் அரசியல் தலைமைகள் செயற்பட தவறியதால் தான், இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதென்பதை நாம் ஏற்க வேண்டும்.

அதேநேரம் கடந்தகால தலைமைகளை குறைகூறிக்கொண்டிருக்கின்ற நாம் அனைவரும் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மனச்சாட்சியை தொட்டு சிந்திக்க வேண்டும்.

மாகாணசபை தேர்தல் என சிந்திக்கும்போது, கிழக்கு மாகாணம் தொடர்பிலேயே நாம் தீவிரமாக சிந்திக்க வேண்டும். வடக்கை விட கிழக்கில் பாரிய பிரச்னைகள் வேறுவேறு ரூபங்களில் எழுந்துள்ளன. எனவே, தமிழ் தேசியக் கட்சிகள் ஒரு பொது அரசியல் செயற்திட்டத்தின் அடிப்படையில், எமது சுயநிர்ணய அடிப்படையில் எமது அரசியல் தீர்வை தொடர்ந்த வலியுறுத்திக் கொண்டு வருகின்ற அதேவேளையில், மாகாண சபை முறையை முழுமையாகவும், உடனடியாகவும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்பதை அழுத்தம் திருத்தமாக இலங்கை அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும், இலங்கை பிரச்னையில் ஈடுபாடு காட்டும் வெளிநாட்டு தரப்பிற்கும் நாம் சொல்ல வேண்டும்.

க.வி.விக்னேஸ்வரன் சொல்லியிருப்பது அவரது சொந்தக்கருத்து. அவருக்குரிய மதிப்போடு, அதை விமர்சனத்திற்குட்படுத்த விரும்பவில்லை. அது தேவையற்றது. தனது மனதில் பட்டதை அவர் கூறியிருக்கிறார். ஆனால், ஒரு விடயத்தை நான் தெளிவாக கூறி வைக்க விரும்புகிறேன்.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் அளவிலிருந்து ஒரு பொதுவேட்பாளர் நிறுத்தப்படுவதாக இருந்தால், அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள எங்கள் மத்தியில் ஆட்களுக்கு பஞ்சமில்லை. அந்த வாய்ப்பளிக்கப்பட்டால் வேண்டாம் என கூறும் மனநிலையில் எங்களில் எத்தனை பேர் இருக்கிறோம் என்பதை ஒவ்வொருவரும் தமது மனச்சாட்சியில் கைவைத்து பார்த்தால் தெரியும்.

ஆனால், தனிமனித அபிலாசைகள் தொடர்பில் நான் எதையும் கூற முடியாது. ஆனால் அதேநேரத்தில் இந்த மாகாணசபை முறைமை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியுமானால், அப்போது நிர்வாக திறமையும், நடைமுறை அரசியலை கையாள தெரிந்த ஆளுமையும் கொண்டவர்களைத்தான் வடக்கிலும், கிழக்கிலும் நாம் முதலமைச்சர் வேட்பாளராக்க வேண்டும்.

இன்று தேவைப்படுவது, நாம் எல்லோரும் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றுசேர முடியுமா என்பதுதான். முதலில் அந்தக் கேள்விக்கு விடை காணவேண்டும்.

விக்னேஸ்வரன் கூறிய கருத்தை விமர்சனங்களுக்கு உள்ளாக்காமல், அது அவருடைய கருத்து. அதை சொல்ல அவருக்கு உரிமையுண்டு. அவர் தனது மனதில் பட்டதை கூறியிருக்கிறார் என்று நோக்க வேண்டும். தேவையற்ற அரசியல் சர்ச்சைகளை இது தொடர்பில் கருத்துக் கூறி ஏற்படுத்தக்கூடாது. அது ஆக்கபூர்வமானதல்ல - என்றார்.



# இயக்கச்சியில் பற்றைக்குள் கைவிடப்பட்ட நிலையில் கார்!

கிளிநொச்சி, ஏப். 15

கிளிநொச்சி மாவட்டம் இயக்கச்சிக்கு அண்மித்த பகுதியில் பற்றை ஒன்றுக்குள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட கார் தொடர்பில் படைத்தரப்பு மற்றும் பொலிஸாரால் தீவிர விசாரணை முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

ஏ - 09 நெடுஞ்சாலையில் இயக்கச்சிக்கும் ஆனையிறவுக்கும் இடைப்பட்ட பகுதியில் இயக்கச்சிக்கு அண்மித்த பகுதியில் உள்ள பற்றைக்காடு ஒன்றினுள் கார் ஒன்று அநாதரவாக நிற்பது தொடர்பில் படைத்தரப்புக்கு தகவல் கிடைத்திருக்கின்றது.

குறித்த காரில் யாரும் இல்லாத நிலையில், அது அங்கே எப்போது கொண்டுவரப்பட்டது?, அது யாருக்குச் சொந்தமானது?, அசம்பாவிதங்கள் எதாவது நடைபெறப் போகிறதா? போன்ற பல கோண விசாரணைகள் படைத்தரப்பு மற்றும் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த காரை ஒளிப்படம் எடுக்கவோ, அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிடவோ ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

விசாரணைகளின் முடிவிலேயே குறித்த விடயம் தொடர்பில் தகவல் தரப்படும் என்று பொலிஸ் தரப்பு தெரிவித்திருந்தது.

இந்நிலையில் நேற்றுக் காலை விசேட அதிரடிப்படையின் உதவியுடன் காரின் கதவுகள் திறக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. காரின் பல பாகங்கள் திருட்டு போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் குறித்த கார், தென்னிலங்கையில் திருட்டு போன காராக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதுவரை எவரும் இது தொடர்பாக கைது செய்யப்படவும் இல்லை. மேலதிக விசாரனைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரஞ்சன் ராமநாயக்க விடுதலைக்காக சகல வழிகளிலும் முயற்சிப்போம்!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 15

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதில் உறுதிபூண்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அகுனுகொலபெலெச சிறைச்சாலைக்கு சென்று ரஞ்சன் ராமநாயக்கவை சந்தித்த பின் ஊடகங்களுடன் பேசிய சஜித் பிரேமதாஸ, ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக ஜனநாயக ரீதியாகவும், அரசமைப்பு ரீதியாகவும், சட்டரீதியாகவும் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வர். ரஞ்சனுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று போராடுவோம் - என்றார்.

# பஸ் சாரதிகளுக்கு வருகின்றது போதைப்பொருள் சோதனை

கொழும்பு, ஏப். 15

கொழும்பையும் அதனை அண்மித்த பகுதிகளிலும் தனியார் பஸ்களின் சாரதிகளில் சுமார் 80 சதவீதமானவர்கள் போதைக்கு அடிமைப்பட்டவர்களாக இருப்பதாக வாகன ஒழுங்குபடுத்தல் மற்றும் பஸ் போக்குவரத்து சேவைகளுக்கான இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இந்த நிலையை கட்டுப்பாட்டினுள் கொண்டுவரும் வகையில், பார ஊர்திகளுக்கான சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரிகளில் போதைப் பொருள் பரிசோதனை ஒன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

“இது ஒரு பாரதூரமான பிரச்னை. இந்த விடயம் தொடர்பில் போதைப் பொருள் பரிசோதனையை ஒன்றை மேற்கொள்வது தொடர்பில் அமைச்சரவைக்கு பரிந்துரைக்கவுள்ளோம்.

பார ஊர்தி விண்ணப்பதாரிகளில் பரிசோதனை திகதிக்கு ஒரு மாதத்துக்கு முன்னரான காலப்பகுதியினுள் அவர்களின் உடலில் ஏதேனும் வகையிலான போதைப் பொருள் அடங்கியுள்ளதாக என்பதை கண்டறியும் வகையில் இந்தப் பரிசோதனை முன்னெடுக்கப்படும்.

பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் நபர் போதைப் பொருள் பாவிப்பவராக இருந்தாலும், ஒரு மாத காலப்பகுதிக்கு அவர் பயன்படுத்தவில்லையாயின், போதைப் பொருளுக்கு அடிமையானவராக அவரை கருத முடியாது. ஏனெனில் போதைக்கு அடிமையானவர்களால் ஒரு வார காலத்துக்கு கூட போதைப் பொருள் பாவிக்காமல் இருக்க முடியாது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலங்கைத் தமிழ் அகதிகள்

# அகதிகள்

## சட்டத்திற்கு புறம்பாக குடியேறியவர்கள்.. இந்தியாவின் நிலைப்பாடு மாறுவது ஏன்?

கடந்த வாரம் ரொஹிங்கியாவை சேர்ந்த 300 நபர்களை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு மறுப்பு தெரிவித்து பேசிய இந்தியாவின் வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. அவர்கள் சட்டத்திற்கு புறம்பாக குடியேறியவர்கள் என்று கூறி ஜம்மு மற்றும் டில்லியின் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டவர்களை வெளியேற்ற மறுத்த அரசு அவர்களை வெளிநாட்டினர் சட்டம் 1946-ன் கீழ் நாடு கடத்த வேண்டும் என்று கூறியது.

அகதி என்ற சொல் தங்கள் நாட்டை விட்டு வெளியே இருக்கும், இனம், மதம், தேசியம் மற்றும் குறிப்பிட்ட சமூக குழுக்களில் இருப்பதால் உருவாகியுள்ள துன்புறுத்தலினால் நிறுவப்பட்ட அச்சத்தின் காரணமாக அவர்களால் தங்களின் நாட்டுக்கு திரும்பி செல்ல இயலாதவர்கள் அகதிகள் என்று கூறுகிறது 1951 ஐ.நா. மாநாடு மற்றும் அடுத்தடுத்த 1967 நெறிமுறை. நாடற்றவர்களும் இந்த காரணத்தினால் அகதிகள் என்று கூறலாம். பிறந்த நாடு (குடியுரிமை பெறப்பட்ட நாடு) தற்போது முன்னாள் குடியிருந்த நாடு என்ற அர்த்தத்தில் பொருள் கொள்ளப்படும். (ஒக்ஸ்போர்ட் கையேடு அகதிகள் மற்றும் கட்டாய இடம்பெயர்வு ஆய்வுகள்).

ஐ.நாவின் அறிக்கைப் படி 2017ஆம் ஆண்டு மியான்மரில் உள்ள ரக்கைனில் நடத்தப்பட்ட ராணுவ நடவடிக்கைகளுக்கு பிறகு ரொஹிங்கியாக்கள் தொடர்ந்து அந்த நாட்டில் இருந்து வெளியேறி வருகின்றனர். இது தற்போது உலகின் மிகப்பெரிய அகதிகள் பிரச்னையாக உருவாகி வருகிறது. வங்க தேசத்தில் உள்ள காக்ஸ் பஜார் உலகின் மிகப் பெரிய அகதிகள் முகாம் ஆகும். ரொஹிங் கியா மக்கள், முக்கியமாக இஸ்லாமியர்கள், வங்கதேசத்தில் இருந்து சட்டத்திற்கு புறம் பாக குடியேறியவர்கள் என்று மியான்மர் கூறுகிறது.

கடந்த மாதம் பங்களாதேஷ் சென்ற பிரத மர் நரேந்திரமோடி திட்டமிட்டு வெளியேற் றப்பட்ட 1.1 மில்லியன் மக்களுக்கு அடைக்கலம் தந்து மனித நேய உதவிகளை வழங்கி வரும் பங்களாதேஷ் அரசை மனம் உவந்து பாராட்டினார் மோடி என்று கூட்டு அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரொஹிங்கியாக்களை மியான் மருக்கு திருப்பி அனுப்புவதில் இந்தியா ஒரு வலுவான பங்கைக் கொள்ளுமாறு பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவிடம் கேட்டுக் கொண்டார். பி.டி.ஐ அறிக்கையின்படி, “அகதிகளை நிலையான முறையில் திரும்பப் பெற” இந்தியா விரும்புகிறது என்று மோடி கூறினார்.

ஆனால் இந்தியாவிற்கு வந்துள்ள 40 ஆயிரம் ரொஹிங்கியாக்களை திருப்பி அனுப்பவது குறித்து இந்தியா தெளிவற்று இருக்கிறது. அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையருக்கு, அங்கு இருக்கும் சில அகதிகளுக்கு அடையாள அட்டை வழங்க அரசாங்கம் அனுமதித்தது. இப்படியாக 14 ஆயிரம் ரொஹிங்கியாக்கள் அகதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

உச்ச நீதிமன்றத்தில் , சோலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா அவர்களை சட்டத்திற்கு புறம்பாக குடியேறியவர்கள் என்று கூறினார். பயங்கரவாதம் மற்றும் வகுப்பு வாத அவதூறுகள் பற்றிய பொது மற்றும் அரசியல் நிலைப்பாடுகளுடன் இணைத்து, அவர்கள் உடனடியாக “நாடு கடத்தப்பட வேண்டும்” என்ற கோரிக்கையும் உள்ளது.

### இராணுவ ஆட்சி

மியன்மாரில் பெப்ப்ரவரி முதலாம் திகதி ஆட்சியை இராணுவம் கைப்பற்றியதில் இருந்து மிசோரமிற்கு வருகை புரியும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவர்களில் பலர் சின் இனத்தை சேர்ந்த ஜனநாயக செயற்பாட்டாளார்கள் அல்லது போராட்டக்காரர்களை சுட மறுத்த காவல்துறையினராக உள்ளனர். அவர்கள் திரும்பி செல்லும் பட்சத்தில் மியான்மர் இராணுவம் அவர்களை கொன்று விடும் என்று அச்சம் அடைந்துள்ளனர்.

அகதிகள் அடிப்படையில் பார்த்தால் ரொஹிங்கியாவினருக்கும் இவர்களுக்கும் பெரிய வேறுபாடுகள் ஒன்றும் கிடையாது. வெவ்வேறு சூழ்நிலைகளில் மியன்மார் இராணுவத்திடம் இருந்து அவர்கள் தப்பி வந்திருந்தாலும் கூட ஒரு பிரிவினரை மியன்மார் அந்நாட்டின் குடிமக்களாக ஏற்றுக் கொள்கிறது. ரொஹிங்கியாக்களை நிராகரிக்கிறது.

மிசோரம் மற்றும் மணிப்பூரில் தஞ்சம் கோரும் மக்களை ரொஹிங்கியாக்கள் ஆவலுடன் கவனிக்கும் என்று டில்லி பதில் கூறியுள்ளது. இதுவரை வடகிழக்கில் இருக்கும் நிலைமை குறித்து புதுடில்லி குழப்பத்துடன் இருக்கிறது தெளிவாகிறது. எல்லை தாண்டும் நபர்களை தடுத்து நிறுத்த பாதுகாப்பு படைக்கு புதுடில்லி உத்தரவிட்டிருந்தாலும் அதனை மிசோரம் அரசு எதிர்க்கிறது. முதல்வர் மியான்மரில் இருந்து வரும் நபர்களுக்கு துணையாக இருப்பதை உறுதி செய்தார். மேலும் ஜனநாயக அரசில் இருந்து நாடு தப்பிய குழுக்கள் உறுப்பினர்களுடன் ஆலோசனை கூட்டம் ஒன்றையும் அவர் நடத்தினார். மணிப்பூரில், மியன்மாரைச் சேர்ந்த எவருக்கும் உணவு அல்லது தங்குமிடம் வழங்க வேண்டாம் என்று மக்களைக் கேட்கும் அரசாங்க உத்தரவு பரவலாக விமர்சிக்கப்பட்டதை அடுத்து அவசரமாக திரும்பப் பெற வேண்டியிருந்தது.

### நாடு கடத்தல், திரும்பிச் செல்லாதது

ரொஹிங்கியாக்களை “அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றி” வெளிநாட்டினர் சட்டத்தின் கீழ் “நாடு கடத்த” உச்சநீதிமன்றம் உத்தரவிட்டாலும், நடைமுறையில் இது சிக்கலானது. பங்களாதேஷ் அகதிகள் முகாமில் பெற்றோரிடமிருந்து பிரிந்த 14 வயது ரொஹிங்கியா சிறுமியை திருப்பி அனுப்ப அசாம் அரசு மேற் கொண்ட முயற்சி தோல்வியிலிருந்து இது தெளிவாகிறது. அசாமின் சில்ச்சாரில் நுழைந்த போது அந்த சிறுமி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தடுப்பு முகாமில் வைக்கப்பட்டார். மியன்மாரில் அவருடைய குடும்பத்தினர் யாரும் இல்லை. கடந்த வாரம் அசாம் அதிகாரிகள் அவரை மியன்மாருக்கு திருப்பி அனுப்ப மணிப்பூரின் மோரெஹிற்கு கொண்டு வந்த போது மியன்மார் அரசு அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.

சட்டரீதியான நாடுகடத்தலுக்கு அடிப்படையானது மக்களை எல்லையைத் தாண்டி அனுப்பவது கிடையாது. மாறாக நாடுகடத்தப்பட்டவரை அந்நாட்டினராக ஏற்றுக்கொள்ள வேண்டும். கடந்த நான்கு ஆண்டுகளில், காக்ஸ் பஜாரில் ரொஹிங்கியாக்களை திரும்ப அழைத்துச் செல்ல மியன்மாரை வற்புறுத்திய வங்கதேசத்தின் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன. இந்தியா ஒரு சிலரை மிகவும் சிரமத்துடன் திருப்பி அனுப்ப முடிந்தது.

ரொஹிங்கியா மக்களை சட்டத்திற்கு புறம்பாக குயேறியவர்கள் என்று அழைத்தாலும் கூட, அவர்களை மியான்மருக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தாலும் இந்தியா “non - refoul - ement”-க்கு எதிராக உள்ளது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை போன்ற பிற சர்வதேச ஒப்பந்தங்களுக்கு இது கையொப்பமிட்டது.

Non-refoulement என்பது எந்த ஒரு நிலையிலும் அவர்/அவளுக்கு ஆபத்து நேரிடும் நிலை இருக்கும் பட்சத்தில் எந்த ஒரு அகதியும் திருப்பி அனுப்பப்படாதது. இந்த கொள்கை 2018 ஆம் ஆண்டளவில் ஐ.நா.வில் இந்த வழக்கை நீர்த்துப்போகச் செய்வதிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று கூறியதுடன், அகதி அந்தஸ்தை வழங்குவதற்கான தடையை உயர்த்துவதற்கும் எதிராக வாதிட்டது, இது ஏராளமான மக்களை “அதிக பாதிப்புக்குள்ளாக்குகிறது” என்று கூறியது.

இந்தியா எவ்வாறு வெவ்வேறு நாடுகளில் இருந்து வரும் அகதிகளை கையாளுகிறது என்பதையும் இது தெளிவுபடுத்துகிறது. இலங்கை தமிழ் அகதிகள் பலரும் தமிழக முகாம்களில் உள்ளனர். மாநில அரசு அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருவதுடன் அவர்களுக்கு வேலை மற்றும் கல்வியை கிடைக்கவும் வழி வகை செய்கிறது. 2009ம் ஆண்டு இறுதி கட்ட போருக்கு பிறகு தாயகம் திரும்புபவர்களுக்கு இந்திய அரசு உக்கம் அளித்தது. வீடு திரும்பும் நிலைமை பாதுகாப்பாக இருந்தால், யு.என்.எச்.சி.ஆர் போன்ற ஒரு நிறுவனத்துடன் கலந்தாலோசித்து திரும்ப செல்வது குறித்து முடிவெடுத்தது. ஆனாலும் இந்த முறையும் non-refoulement கொள்கையை பின்பற்றுகிறது.

“தன்னார்வமாக திரும்பி செல்வதற்கான ஒரு சூழலை உருவாக்குவது - மற்றும் திரும்பி வருபவர்களுக்கு ஆதரவைத் திரட்டுவது” தான் முக்கியமானது என்று யு.என்.எச்.சி.ஆர். கூறுகிறது. இதன் பொருள் அதன் சொந்த மக்களை மீண்டும் ஒருங்கிணைக்க உதவுவதற்கு பிறந்த நாட்டின் முழு அர்ப்பணிப்பு” தேவைப்படுகிறது என்பதாகும். ரொஹிங்கியாக்கள் அல்லது ஜனநாயக சார்பு ஆர்வலர்கள் தானாக முன்வந்து நாடு திரும்ப விரும்பும் இடத்திலிருந்து மியான்மார் இப்போது வெகு தொலைவில் உள்ளது.

**- இந்தியன் எக்ஸ்பிரஸ்.**


ரொஹிங்கியா அகதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முடிவு குறித்து 3 இரகசிய அறிக்கைகள்! அமைச்சர்களுக்கு நம்பிக்கையூட்டிய எடப்பாடி






ஆ. விஜயானந்த்

தமிழக சட்டப்பேரவை தேர்தல் வாக்குப் பதிவுக்குப் பிறகு முதல்வர் பழனிசாமி கூடுதல் உற்சாகத்துடன் இருப்பதாக அக்கட்சியின் நிர்வாகிகள் பேசி வருகின்றனர். கருத்துக் கணிப்புகள் எல்லாம் தி.மு.க. அணிக்குச் சாதகமாக சொல்லப்பட்ட நிலையில், முதல்வர் உற்சாகமாக இருப்பதற்கு என்ன காரணம்?

தமிழக சட்டமன்ற தேர்தல் வாக்கு பதிவு கடந்த 6 ஆம் திகதி நிறைவடைந்தது. இதன் பிறகு வாக்குப் பெட்டிகள் அனைத்தும் வாக்கு எண்ணிக்கை மையங்களுக்குப் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டன. அங்கு அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள், வாக்குப் பெட்டி இயந்திரங்களை இரவு - பகலாக கண்காணித்து வருகின்றனர். கோடை வெயிலின் தாக்கத்தைப் பொருட்படுத்தாமல் பிரசாரக் களத்தில் வலம் வந்த வேட்பாளர்கள் பலரும், தற்போது ஓய்வெடுத்து வருகின்றனர். அதிலும், அ.தி.மு.க அமைச்சர்கள் பலரும் தூக்கத்துக்கே அதிகப்படியான நேரத்தை ஒதுக்கி வருவதாகக் கூறப்படுகிறது.

**3 அறிக்கைகள்!**

சட்டமன்ற தேர்தல் வாக்குப் பதிவுக்கு முன்பு வரையில் அ.தி.மு.க அணிக்கு 40 இடங்கள் முதல் 50 இடங்கள் வரையில் கிடைக்கலாம் என்றே சில கருத்துக்கணிப்புகள் தெரிவித்தன. இதனை விமர்சித்து அ.தி.மு.க அமைச்சர்களும் பதிலடி கொடுத்தனர். இந்நிலையில், தன்னைச் சந்திக்க வந்த அமைச்சர்களிடம் மிகுந்த நம்பிக்கையோடு முதல்வர் பழனிசாமி பேசியிருக்கிறார். இதற்கு ஆதாரமாக 3 முக்கிய அறிக்கைகளை அ.தி.மு.க நிர்வாகிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

“வாக்குப் பதிவுக்குப் பிறகு சேலம், நெடுஞ்சாலை நகரில் உள்ள தனது வீட்டில் முதல்வர் ஓய்வெடுத்து வருகிறார். அவரை அமைச்சர்கள் தங்கமணி, எம்.சி.சம்பத், கே.சி.வீரமணி உள்பட பலரும் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பின்போது வழக்கத்துக்கு மாறான உற்சாகத்தில் முதல்வர் இருந்தார். இதனை அமைச்சர்களே எதிர பார்க்கவில்லை” என்கிறார் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த அ.தி.மு.க முன்னணி நிர்வாகி ஒருவர். தொடர்ந்து, பி.பி.சி. தமிழிடம் சில விவரங்களைப் பட்டியலிட்டார்.

“அமைச்சர்களுடனான கூட்டத்தில், ‘100 முதல் 110 இடங்கள் வரையில் நமக்குக் கிடைக்கும்’ என முதல்வர் பேசியிருக்கிறார். இதற்கு அடிப்படையாக சில விஷயங்களும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன. அப்போது பேசிய முக்கிய நிர்வாகி ஒருவர், ‘தென் மாவட்டங்களில் நாம் எதிர்பார்த்த அளவுக்கு மோசமாகச் செல்வதற்கு வாய்ப்பில்லை. வடக்கில் வன்னியர் வாக்குகள் நல்லபடியாக இந்த அணிக்கு வந்துள்ளதாக நினைக்கிறோம். சென்னையும் டெல்டாவும்தான் நமக்கு அதிகப்படியான சிக்கலைக் கொடுக்கும். அதை நாம் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை’ எனக் கூறியுள்ளார்.

மேலும், ‘தென் மண்டலத்தில் 15 தொகுதிகளும் மேற்கு மாவட்டங்களில் 35 முதல் 40 இடங்களும் வடக்கில் 30 தொகுதிகளும் நமக்கு வந்து சேரும். இவற்றைக் கணக்கிட்டாலே 80 தொகுதிகளுக்கு மேல் அ.தி.மு.க அணிக்கு கிடைக்கலாம். இதன்பிறகு கூடுதலாக எத்தனை தொகுதிகள் கிடைத்தாலும் போனஸ்தான்’ என்ற கணக்கில் முதல்வர் இருக்கிறார். அ.தி.மு.கவுக்குத் தேர்தல் வேலை பார்த்த வல்லுநர் குழுவினர், தொடக்கத்தில் ‘இந்தத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு மோசமான தோல்வி கிடைக்கலாம். தி.மு.க 180 இடங்களைத் தாண்டும்’ எனப் பேசி வந்தனர். குறிப்பாக, ‘தென்மாவட்டங்களில் 5 இடங்களில் வென்றாலே பெரிய விஷயம்’ எனவும் பேசி வந்தனர். ஆனால், தற்போது எதிர்பார்த்ததை விடவும் நல்லபடியாக வாக்குகள் வந்துள்ளதாகவும் நினைக்கின்றனர். காரணம், தி.மு.க, அ.ம.மு.கவை விட வாக்காளர்களைக் குளிர்விக்கும் வேலைகளை அ.தி.மு.க தரப்பில் சிறப்பாகச் செய்ததுதான்.

**தேவேந்திர குல வேளாளர் வாக்குகள்!**

இது தவிர, தென்மாவட்டங்களில் தேவேந்திர குல வேளாளர் வாக்குகள் அ.தி.மு.க-பா.ஜ.க அணிக்கு வந்துள்ளன என நம்புகின்றனர். இதில் தி.மு.கவுக்குச் செல்ல வேண்டிய சமூக வாக்குகளை டாக்டர் கிருஷ்ணசாமி, தனியாக நின்று பிரித்துவிட்டதாகவும் நம்புகின்றனர்.

‘ஒட்டப்பிடாரத்திலேயே அ.தி.மு.க வெல்லும்’ எனவும் முதல்வர் நம்புகிறார்.

‘தென்மாவட்டங்களில் அ.ம.மு.க பெரிதாக எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த வில்லை’ எனவும் அங்குள்ள அமைச்சர்கள் உறுதியாக நம்புகின்றனர்” என்கிறார்.

தொடர்ந்து, வட மாவட்ட நிலவரங்களைப் பட்டியலிட்டார். “ஒரு தொகுதியில் 98,000 ஆண்கள் வாக்களித்திருந்தால் அதில் பெண்கள் 1,02,000 என்ற அளவில் வாக்களித்துள்ளனர். அதாவது, பல தொகுதிகளில் ஆண்களைவிட பெண்கள் அதிகப்படியாக வாக்களித்துள்ள னர். ஆனால், வடக்கில் மட்டும் நிலைமை சற்று மாறுபடுகிறது. அங்கு பெண்களைவிட ஆண்கள் அதிகளவில் வாக்களித்துள்ளனர். பொதுவாக, பெண்கள் அதிகப்படியாக வாக்களித்தால் அ.தி.மு.கவுக்கு சாதகமாக இருக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. ஆறு சிலிண்டர்கள், மாதம் 1,500 ரூபாய், இலவச கேபிள் ஆகியவற்றோடு வாக்குக்கு ஆயிரம் ரூபாய் என்ற அளவில் பல தொகுதிகளில் விநியோகம் நடந்தன. வாக்குக்குப் பணம் வாங்கிவிட்டால் விசுவாசமாக இருக்க வேண்டும்’ என்ற எண்ணமும் பெண்கள் மத்தியில் உள்ளது. அந்த அடிப்படையிலும் பெண்கள் வாக்குகள் அ.தி.மு.க அணிக்கு வந்திருக்கலாம் என நினைக்கின்றனர்.

**புரியாத புதிரான ‘வடக்கு’!**

ஆனால், ராணிப்பேட்டை, வேலூர், கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களிலும் பெண்களைவிட ஆண்கள் அதிகப்படியாக வாக்களித்துள்ளனர். வட மாவட்டங்களைப் பொறுத்தவரையில் முதல்வருக்குத் தேர்தல் வேலை பார்க்கும் சுனில் குழு கொடுத்த அறிக்கையும் தி.மு.கவின் ஐபேக் கொடுத்துள்ள அறிக்கையும் பெரிதாகத் தெளிவைத் தரவில்லை. இது புரியாத புதிராக உள்ளது.

வன்னியர் இடஒதுக்கீட்டின் மூலம் அங்குள்ள இதர சமூகங்கள் அ.தி.மு.க அணிக்கு எதிராகத் திரும்பியிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. ஏனென்றால், இடஒதுக்கீட்டின் பலனை அதிகம் அனுபவிப்பவர்களாக ஆண்கள் உள்ளனர். வடமாவட்டங்களில் ஆண்கள் அதிகப்படியாக வாக்களித்ததையும் இதனோடு தொடர்புபடுத்திப் பார்க்கிறோம். ஆனால், ‘ வடக்கில் நல்லபடியாக செயல்பட்டுள்ளோம். 60 சதவிகிதமான இடங்களில் வெல்வோம்’ என முதல்வரிடம் அவரது தேர்தல் ஆலோசகர் தெரிவித்துள்ளார். எந்த அடிப்படையில் இதனை அவர் தெரிவித்தார் எனவும் தெரியவில்லை.

**வி.சி.க 6; பா.ஜ.க 3..!**

அதே நேரம், ‘வி.சி.க ஆறு இடங்களிலும் வெல்லலாம்’ எனவும் முதல்வருக்கு அளிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கோபத்தைத்தான் அரக்கோணம் விவகாரத்தில் பா.ம.க தரப்பு காட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்தத் தேர்தலில் 11 முதல் 12 தொகுதிகளில் பா.ம.க வெல்லலாம் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பா.ஜ.கவை பொறுத்தவரையில் நெல்லையில் நயினார் நாகேந்திரன், கோவை தெற்கில் வானதி, அரவக்குறிச்சியில் அண்ணாமலை ஆகியோருக்கு வெற்றி வாய்ப்பு உள்ளதாக நம்புகின்றனர்.

அதிலும், அரவக்குறிச்சியில் அண்ணாமலை கரையேறுவார் என மத்திய உளவுத்துறை அறிக்கை தெரிவித்துள்ளது. தாராபுரத்தில் முருகனுக்கு சற்று சிரமமான சூழலே நிலவுகிறது. மொடக்குறிச்சியில் தி.மு.கவின் சுப்புலட்சுமி ஜெகதீசன் பெரிதாக தேர்தல் வேலை பார்க்கவில்லை. அங்கு பா.ஜ.க வேட்பாளர் சரஸ்வதி நன்றாக தேர்தல் வேலை பார்த்தார். ஆனால், அதையும் மீறி கள நிலவரம் உதயசூரியனுக்கு சாதகமாகவே உள்ளதாகவும் முதல்வரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது” என்கிறார்.

**முதல்வரின் உற்சாகம்!**

மேலும், ‘மாநிலம் முழுவதும் 86 தொகுதிகள் வரையில் அ.தி.மு.க அணிக்கு உறுதியாகக் கிடைக்கலாம். 20 முதல் 30 தொகுதிகளில் இழுபறி நீடிக்கலாம் ‘ என மத்திய உளவுத்துறை அறிக்கை கொடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. மத்திய உளவுத்துறை, மாநில உளவுத்துறை ஆகியவற்றின் அறிக்கையும் தேர்தல் வல்லுநர் சுனில் குழு கொடுத்த அறிக்கையும் ஒன்று சேர்ந்து முதல்வருக்கு உற்சாகத்தை அளித்துள்ளதாகவும் அ.தி.மு.க. நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

அ.தி.மு.கவின் வெற்றிக் கணக்கு குறித்து தி.மு.கவின் சட்டத்துறை இணைச் செயலாளர் வீ. கண்ணதாசனிடம் பி.பி.சி. தமிழுக்காக பேசினோம். “புதிய புதிய அறிக்கைகளை வைத்துக் கொண்டு, முதல்வர் தன்னைத்தானே தேற்றிக்கொள்கிறார் என்றுதான் பார்க்கிறேன். களநிலவரம் அப்படி யில்லை. 180 தொகுதி களுக்கும் மேலாக தி.மு.க அணி வெற்றி பெறும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்” என்கிறார்.

“கடந்த 2011 ஆம் ஆண்டு தி.மு.க வெற்றி பெறும் என மத்திய உளவுத்துறை அறிக்கை கொடுத்தது. ஆனால், நடந்ததே வேறு. 2019 மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க அணி முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் வெல்லும் எனவும் கணித்தனர். இப்படிப்பட்ட உளவுத்துறைகளின் அறிக்கையை அவர்கள் நம்பிக் கொண்டிருக்கின்றனர். வாக்கு எண்ணிக்கை முடியும்போது உண்மை நிலவரம் தெரியவரும்” என்கிறார்.

**சாதக, பாதகம் எங்கே?**

‘களநிலவரம் எந்த அணிக்குச் சாதகமாக வரும்?’ என்பது குறித்து பி.பி.சி. தமிழிடம் பேசிய அரசியல் ஆய்வாளர் ரவீந்திரன் துரைசாமி, “2019 மக்களவைத் தேர்தலுக்கு முன்பாகவே, வடமாவட்டங்களில் ஸ்டாலின் உறுதியாக வெற்றி பெறுவார் என்று கூறினேன். அது நடந்தது. தற்போது கடும் போட்டி இல்லை என்ற சூழலால், தி.மு.க அணியின் வாக்கு சதவிகிதம் சற்றே குறையலாம். அதேநேரம், முதல்வரின் சொந்த சமூக பலமும் வன்னியர் சமூகத்தின் மீதான பாசமும் சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அ.தி.மு.கவின் வாக்கு வங்கியை சற்று மேம்படுத்தலாம்” என்கிறார்.

மேலும், “நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் அ.தி.மு.க அணிக்குப் பாதகமான சூழல் ஏற்படலாம் என நினைக்கிறேன். அந்தியூர், பவானியில் தி.மு.க அணிக்கான வாக்குகள் கூடலாம். சில தொகுதிகளில் எடப்பாடி பழனிசாமியை ஏற்றுக் கொள்ளாத சில சமூகங்கள், நாம் தமிழர் கட்சியை நாடியுள்ளதையும் பார்க்க முடிகிறது. இவர்களில் பலரும் தி.மு.க அணிக்கு எதிரானவர்கள். ‘ஜெயலலிதா இருந்த அ.தி.மு.க வேறு, தற்போதுள்ள அ.தி.மு.க வேறு’ என்ற மனநிலையிலும் வாக்காளர்கள் உள்ளனர். எனவே, அ.தி.மு.க தலைமையின் எண்ண ஓட்டத்துக்கு ஏற்ப தொகுதிகள் கிடைக்குமா என்பது தேர்தல் முடிவில் தெரியவரும்” என்கிறார்.

வாக்கு எண்ணிக்கை முடியும் வரையில் ஒவ்வொரு கட்சியும் தங்களின் மனநிலைக்கு ஏற்ப சதவிகிதக் கணக்குகளைப் போட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் தாண்டி, மக்கள் அளித்துள்ள உண்மையான மதிப்பெண்ணைக் காணவும் வேட்பாளர்கள் பதற்றத்துடன் காத்திருக்கின்றனர்.

நன்றி : பி.பி.சி. தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**41**

## 2014 - (26)

(26) எல்லாத் தோடம்பழங்களும் எலுமிச்சம் பழங்களாகும். வேறு எதுவும் எலுமிச்சம்பழம் அன்று அவ்வாறெனின்.
1. எல்லா எலுமிச்சம்பழங்களும் தோடம்பழங்கள் ஆகும்.
2. சில எலுமிச்சம்பழங்கள் தோடம்பழங்கள் ஆகும்.
3. தோடம்பழங்கள் எலுமிச்சம்பழங்கள் அல்ல.

## 2015 - (7,8)

(07) பின்வரும் வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவுசெய்க.
1. கெக்கு இரையை விழுங்குகின்றது
2. கொக்கு இரையை விழுங்குகின்றது
3. கொக்கு இரயை விழுங்குகின்றன

(08) " புளகாங்கிதம்" என்னும் சொல்லில் உள்ள எழுத்துகள் மூலம் ஆக்கக்கூடிய ஒரு சொல்
1. பூங்கா 2. தங்கம் 3. காம்பு

## 2016 - (9)

09.கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.
(1) நாம் கடைமைகளை நிறைவேற்றுவோம்.
(2) நாம் கடமைகளை நிறைவேற்றுவொம்
(3) நாம் கடமைகளை நிறைவேற்றுவோம்.

## 2017 - (16)

16. வாகன உரிமையாளர்கள் அனைவரும் செல்வந்தர்கள் அல்லர் எனின்,
(1) செல்வந்தர் ஒருபோதும் வாகன உரிமையாளர்கள் அல்லர்.
(2) வாகன உரிமையாளர்களாக இல்லாத எல்லோரும் செல்வந்தர்கள் ஆவர்.
(3) சில வாகன உரிமையாளர்கள் செல்வந்தர்கள் அல்லர்.

## 2018 - (7,8)

♦ சொற்கள் உள்ள அட்டைகள் வைத்திருக்கப்பட்டிருக்கும் கோலத்தை விளங்கிக் கொண்டு 07,08 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அம்பு | புத்தி | திருகு | குஞ்சு | கமத்து | | கைப்பிடி |


07. வெறும் அட்டைக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
(1) படுக்கை (2) துதிக்கை (3) உடுக்கை

08. திருகு என்பதற்குப் பதிலாக இடத்தக்க அட்டையைத் தெரிவு செய்க.
(1) உருகு (2) பருகு (3) திக்கு

02D. நுண்ணறிவினைப்பயன்பத்தி செய்யப்படும் எளிய கணித வினாக்கள். அல்லது தரவுகளை நேரடியாகப் பயன்படுத்தும் வினாக்கள்

## 2009 - (20,25,26)

20. இலக்கங்கள் உள்ள சில்லு நேர் கோடு வழியே முன்னோக்கி உருளும் போது சந்திக்கும் ? குறி இடப்பட்டுள்ள கூடுகளுக்குப் பொறுத்தமான எண்கள் முறையே
1. 2,9 ஆகும்
2. 3,2 ஆகும்
3. 3,9 ஆகும்




**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# 24 மணித்தியாலங்களுக்குள் விபத்துக்களால் 11 பேர் பலி!

## சாரதிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.15

**வீதி விபத்துக்களால் நேற்றுக் காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் 11 பேர் உயிரிழந்தனர்.**



இந்நிலையில் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்காக விஷேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வீதி விபத்துக்கள் காரணமாக நேற்றுக் காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் 11 பேர் உயிரிழந்தனர்.

இதன்போது நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துக்களில் சிக்கிய ஆறு பேரும், இதற்கு முன்னர் இடம்பெற்ற விபத்துக்களில் சிக்கி காயமடைந்திருந்த 5 பேரும் இவ்வாறு உயிரிழந்தனர்.

இந்நிலையில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் மாத்திரம் 8 பேர் உயிரிழந்தனர்.

நாட்டில் ஏப்ரல் மாதத்திலேயே அதிகளவான வாகன விபத்துக்கள் பதிவாகி வருகின்றன.

இந்நிலையில் அதனைத் தவிர்ப்பதற்காக பொலிஸ் தலைமையகம் விஷேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதற்கமைய நேற்றுக் காலை ஆறு மணி முதல் இன்று காலை ஆறு மணி வரையிலும் இந்தச் சோதனை நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

இதன்போது, வாகனச் சாரதிகள் அதிவேகமாக பயணிப்பதை தவிர்த்துக்கொள்வதுடன், அதிகளவான பயணிகளை ஏற்றிச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

மதுபோதையில்வாகனங்களைச்செலுத்தும் சாரதிகள் தொடர்பிலும் கண்காணிக்கப்படும்.

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகள் அடையாளம் காணப்பட்டால் அவர்களை பொலிஸார் கைது செய்வதுடன், அவர்களுக்கு பொலிஸார் பிணை வழங்கமாட்டார்கள். இவர்கள் அனைவருமே நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவதுடன், அவர்களது வாகனமும் பறிமுதல் செய்யப்படும்- என்றார். (எ)

# கலால் திணைக்களம் 14 நாள்களுக்கு பூட்டு

கொழும்பு,ஏப்.15

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கலால் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவை 14 நாள்கள் மூடிவைக்குமாறு சுகாதாரப் பிரிவு வழங்கிய ஆலோசனைக்கமைய அதனை மூடி வைத்துள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள கலால் திணைக்களம் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இராஜகிரியவில் அமைந்துள்ள கலால் திணைக்களத்தின் தலைமையகத்தில் பணிபுரிந்துவரும் ஊழியர்கள் சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டமையால், அந்த நிறுவன ஊழியர்கள் அனைவரையும் தனிமைப்படுத்தி வைக்குமாறு சுகாதாரப் பிரிவு ஆலோசனை வழங்கியிருந்தது.

இதனால் கலால் திணைக்களத்தின் சுற்றிவளைப்பு பிரிவு எதிர்வரும் 14 நாள்கள் வரை மூடிவைக்கப்படவுள்ளது.

இதன்போது, மதுபானம், போதைப்பொருள் மற்றும் புகையிலை தொடர்பான குற்றச்செயல்பாடுகள் தொடர்பில் 1913 என்ற இலக்கத்தை தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும்.

இந்த தொலைபேசி இலக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி வரையிலும் செயல்பாட்டில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 5,000 ரூபா சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு மாத்திரமே

கொழும்பு,ஏப்.15

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கத்தால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு மாத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தோம் என சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் சாமர மத்தும களுகே தெரிவித்தார்.

சமுர்த்தி உதவி பெறும் குடும்பம் உட்பட 7 பிரிவினருக்கு அரசாங்கத்தால் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதில் ஏற்பட்டிருக்கும் சர்ச்சை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கத்தால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு சமுர்த்தி உதவி பெறும் குடும்பத்தினருக்கு மாத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

சமுர்த்தி உதவி பெறும் குடும்பத்தினருக்கு மேலதிகமாக குறைந்த வருமானம் பெறும் குடும்பம், முதியோர் கொடுப்பனவு பெறும் குடும்பம் உட்பட குறைந்த வருமானம் பெறும் 7 பிரிவினருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதாக அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

இருந்தபோதும் தற்போது நிதி விநியோகிக்கப்பட்டிருப்பது சமுர்த்தி உதவி பெறும் குடும்பத்தினருக்கு மாத்திரம் வழங்குவதற்காகும். இதன் பிரகாரம் சமுர்த்தி உதவி பெறும் குடும்பத்தினருக்கு குறித்த 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது.

என்றாலும் குறைந்த வருமானம் பெறும் அனைத்து குடும்பத்தினருக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவதாக பிரசாரம் இடம்பெற்றதால் அதனை பெற்றுக்கொள்வதற்காக வந்த சமுர்த்தி உதவி பெறும் குடும்பம் அல்லாதவர்கள் சமுர்த்தி அதிகாரிகளுடன் முரண்பட்டுக்கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாடு திரும்பிய 41 பேருக்கு கொரோனா

# கொழும்பில் மீண்டும் தொற்றாளர் உயர்வு

கொழும்பு,ஏப்.15

இலங்கையில் நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 226 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகிய நிலையில் அதிகளவு நோயாளிகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

இதன்படி கொழும்பில் 51 பேருக்கும், வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய 41 பேருக்கும், குருநாகலில் 33 பேருக்கும், யாழ்ப்பாணத்தில் 24 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

பொலநறுவையில் 22 பேருக்கும், கம்பஹாவில் 10 பேருக்கும், மாத்தளையில் 9 பேருக்கும், கேகாலையில் 8 பேருக்கும், மட்டக்களப்பில் 6 பேருக்கும், நுவரெலியா மற்றும் கண்டியில் தலா 3 பேருக்கும் கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

இதேவேளை, காலி, மாத்தறை, புத்தளம், அநுராதபுரம், மொனராகலை மற்றும் திருகோணமலையில் தலா இருவருக்கும் களுத்துறை, இரத்தினபுரி, மன்னார் மற்றும் முல்லைத்தீவில் தலா ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# 5000 ரூபாய் கொடுப்பனவு இன்றும் வழங்க ஏற்பாடு

கொழும்பு,ஏப்.15

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக வழங்கப்படும் 5,000 ரூபாய் கொடுப்பனவை பெற்றுக் கொள்ள முடியாமல் போனவர்களுக்கு அதனை இன்று 15ஆம் திகதியன்று வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பாதிப்புக்குள்ளான குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் கொடுப்பனவை வழங்கும் வேலைத்திட்டம் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஏழு பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகள் இதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இந்தக் கொடுப்பனவு ஒரு பயனாளி குடும்பத்துக்கு ஒரு பிரிவின் கீழ் மட்டுமே வழங்கப்படும் என்று இந்தக் கொடுப்பனவு தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் ஒரு வீட்டு குடும்பத்துக்கு வீட்டு குடும்பத் தலைவரின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பிரதான குடும்ப அலகிற்கும் பிரதான குடும்ப அலகிற்கு மேலதிகமாக இணைந்த குடும்பம் என்ற ரீதியில் வாழும் குடும்பத்துக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 1,700,000 சமுர்த்தி பெறுநர் குடும்பங்கள், சமுர்த்தி பயனை பெறுவதற்கு காத்திருக்கும் பட்டியலில் உள்ள 780,000 குடும்பங்கள், சமுர்த்தி மேல்முறையீட்டுப்பட்டியலில் உள்ள 726,000 குடும்பங்கள், முதியோருக்கான கொடுப்பனவு பெறும் 626,000 குடும்பங்கள், ஊனமுற்றோர் கொடுப்பனவு பெறும் 123,000 குடும்பங்கள், சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவை பெறும் 44,400 குடும்பங்கள் மற்றும் கிராம குழு மற்றும் பிரதேச செயலாளர்களின் பரிந்துரைகளின்படி வாழ்வாதாரத்தை இழந்தவர்கள் உள்ளிட்டோருக்காக இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# தமிழர் நம்பிக்கை இழக்கக்கூடாது உரிமையை வென்றெடுக்க முடியும்

## சம்பந்தன் எம்.பி. வலியுறுத்து



**கொழும்பு,ஏப்.15**

**எந்தவிதமான துன்பங்கள் துயரங்கள் வந்தாலும் தமிழர்கள் ஒருபோதும் நம்பிக்கையை இழக்கக்கூடாது. நாம் நிச்சயம் உரிமையை வென்றெடுக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.**

மலர்ந்திருக்கும் பிலவ புது வருடத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், ஜனநாயக வழியில் இறுதிவரை போராடி உரிமைகளை வென்றெடுப்போம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அரசாங்கம் செல்லும் பாதை பேராபத்து மிக்கது என்பதால் இந்த நாடு தற்போதைய பாதையில் தொடர்ந்தும் பயணிக்காது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டில் உண்மையான நல்லிணக்கம் ஏற்படக்கூடிய வகையில் தேசிய பிரச்னையான அரசியல் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும்.

இதன்படி தமிழர்களுக்கு எதிராக நடந்த அநீதிகளுக்கு இந்த அரசாங்கம் பொறுப்புக்கூறியே ஆகவேண்டும். அந்தக் கடமையிலிருந்து அரசு விலக்கக் கூடாது.

உள்நாட்டிலும், சர்வதேசத்துக்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் அரசாங்கம் தத்தளித்து வருகிறது. இந்த நடவடிக்கை நாட்டுக்கும் மக்களுக்கும் உகந்ததல்ல.

ஒருமித்த நாட்டுக்குள் அதிஉச்ச அதிகாரப் பகிர்வையே தமிழர்கள் அனைவரும் கோருகின்றனர் என்றும் சுயநிர்ணய அடிப்படையில் தமிழர் பகுதியில் இறைமையை பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (எ)

# தீவிரவாத செயல்பாடுகளை விட அரசால் மோசமான அச்சுறுத்தல்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.15

யுத்தம் மற்றும் தீவிரவாத செயல்பாடுகளை விடவும் மிகவும் மோசமான அச்சுறுத்தல் நிலையை இந்த அரசாங்கம் நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றம்சாட்டியுள்ளது.

இதுதொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர மேலும் தெரிவிக்கையில்:



இலங்கை தர நிர்ணய கட்டளை நிறுவனத்தின் பணிப்பாளர் மேலும்சில உணவுப்பொருள்களிலும் புற்று நோய் மூலக்கூறுகள் இருப்பதாகக் கூறினார்.

ஆனால், அந்த உணவுகள் என்ன என்பதை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தவில்லை. இது மேலும் அச்சத்துக்கு காரணமாகியது.

மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் மிக்க இந்த விவகாரத்தை நகைச்சுவையாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

தேங்காய் எண்ணெய் தவிர வேறு எந்த உணவுப் பொருள்களில் புற்றுநோய் மூலக்கூறுகள் உள்ளன என்பதை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.(எ)

# புதுவருடத்தை முன்னிட்டு இலங்கை வந்த இந்தியாவின் ஐ.என்.எஸ். ரன்விஜய் கப்பல்

கொழும்பு,ஏப்.15

ஐந்தாவது ராஜ்புத் வகை நாசகாரி ஐ.என்.எஸ். ரன்விஜய் கப்பல் இலங்கைக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்துள்ளது.

இலங்கை - இந்திய நட்பு நாடுகள் மத்தியில் கடல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை விருத்தி செய்யும் செயல்பாடுகளின் மற்றொரு படியாக இந்தக் கப்பலின் விஜயம் அமைகின்றது என்று கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.



புதுவருட கொண்டாட்டங்கள் நடைபெறும் தருணத்தில் இலங்கை மக்களுக்கான பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சிக்கான வாழ்த்துக்களுடன் கூட்டொருமைப்பாடு மற்றும் ஐக்கியம் ஆகிய செய்தியையும் குறித்து நிற்பதாக இந்த இந்தியக் கடற்படைக் கப்பலின் வருகை அமைகின்றது.

இந்தக் கப்பல் கப்டன் நாராயணன் ஹரிஹரன், இன்று வியாழக்கிழமை இந்திய அமைதிப் படையினரின் நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தவுள்ளார்.

பாதுகாப்பு சார்ந்த நடவடிக்கைகளில் இலங்கையும் இந்தியாவும் மிகவும் நெருக்கமான ஒத்துழைப்பை பாரம்பரிய ரீதியாகப் பகிர்ந்து வருகின்றன.

பயிற்சி மற்றும் ஆளுமை விருத்தி செயல்பாடுகளில் பரஸ்பரம் நன்மைதரும் வகையில் இரு கடற்படையினரும் ஒத்துழைப்பை வழங்கி செயல்பட்டு வருகின்றனர்.

மிகவும் நெருங்கிய நட்பு நாடுகள் மத்தியில் கடல் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை விருத்தி செய்யும் செயல்பாடுகளில் மற்றொரு படியாக இந்தக் கப்பலின் விஜயம் அமைகின்றது.

நீர் மூழ்கி எதிர்ப்பு வசதியினைக் கொண்டிருக்கும் இந்த ஏவுகணை எதிர்ப்புக்கப்பலானது சுதேசிய முறையில் தயாரிக்கப்பட்ட பிரமோஸ் சுப்பர் சொனிக் ஏவுகணை வசதிகளையும் கொண்டுள்ளது. (எ)

### யாழிலிருந்து கடத்திச் சென்ற

# மஞ்சள் கட்டி மூடைகளுடன் மன்னாரில் ஐவர் சிக்கினர்!

மன்னார்,ஏப்.15

யாழ்ப்பாணத்திலிருந்து 1989 கிலோ கிராம் மஞ்சள் கட்டி மூடைகளை மன்னாருக்கு கடத்தி சென்ற ஐவர் கைது செய்யப்பட்டனர்.

மன்னாரைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர்களை நேற்றுப் புதன்கிழமை காலை 7.55 மணியளவில் மூன்றாம் பிட்டி பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கு மஞ்சள் கட்டி மூடைகள் கடத்தப்படுவதாக இலுப்பைக்கடவை பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இந்தத் தகவலின் அடிப்படையில் விரைந்து செயல்பட்ட பொலிஸார், வாகனம் ஒன்றில் கடத்திவரப்பட்ட மஞ்சள் கட்டி மூடைகளைக் கைப்பற்றினர்.



கைப்பற்றப்பட்ட மஞ்சள் கட்டி மூடைகள் மற்றும் வாகனம் என்பன இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, கைது செய்யப்பட்ட ஐவரும், இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் மீட்கப்பட்ட மஞ்சள் கட்டி மூடைகள் மற்றும் வாகனம் என்பன மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளதோடு, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 5 பேரும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவில் புதிய கொத்தணி அபாயம்:

## கும்பமேளா திருவிழாவில் கூடிய 1002 பேருக்கு கொரோனா தொற்று!

ஹரித்துவார், ஏப். 15

இந்தியாவின் கும்பமேளா புனித நீராடலுக்காக 28 இலட்சம் பேர் ஒன்றுகூடினர். இதில் பங்கேற்ற 1002 பேருக்கு இரு நாட்களில் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனால், அங்கு புதிய கொத்தணி ஒன்று உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்துக்கள் கூடி புனித கங்கை நதியில் நீராடும் சடங்கு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இதற்காக உத்தரகாண்ட் மாநிலத்தின் ஹரித்துவாரில் சாதுக்கள், பொதுமக்கள் என 28 இலட்சம் பேர் கூடினர்.

ஏற்கனவே, நாட்டில் தினசரி தொற்று எண்ணிக்கை ஒரு இலட்சத்தை கடந்து பதிவாகும் நிலையில், இந்த ஒன்றுகூடலால் பெரும் தொற்று அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இந்த நிகழ்வுக்கு அரசு தடை விதிக்க வேண்டும் என்று சுகாதார நிபுணர்கள் அரசுக்கு கூறினர். ஆனால், இந்திய அரசாங்கம் தடை விதிக்க மறுத்து விட்டது.

கட்டுப்பாடுகள் பல போடப்பட்டபோதும், அங்கு அவை எதுவும் கடைப்பிடிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. இந்நிலையில், நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் 1002 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் கும்பமேளா திருவிழாவில் பங்கேற்றவர்களாவர்.

கும்பமேளாவில் பல மாநிலங்களை சேர்ந்தவர்களும் வருகை தந்தமையால் தொற்று பல இடங்களுக்கும் பரவும் அபாய நிலை உருவாகியுள்ளது. இதையடுத்து ஆளும் மத்திய அரசுக்கு எதிராகப் பல தரப்பட்டவர்களும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

இதேசமயம் நேற்றுக் காலை வரை அந்நாட்டில் ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 372 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். 1027 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## வேற்றுக்கிரக பறப்பு இடைநிறுத்தப்பட்டது!

நியூயோர்க், ஏப். 15

செவ்வாய் கிரகத்துக்கு நாஸா அனுப்பி வைத்துள்ள 'பெர்சிவரன்ஸ்' ஆய்வுக் கலத்திலுள்ள சிறிய ஹெலிகொப்டரை பறக்க வைப்பது தொழில்நுட்ப சிக்கல் காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பெர்சிவரன்ஸ் ஆய்வுகலம் கடந்த பெப்ரவரி 18ஆம் திகதி செவ்வாயில் களமிறங்கியது. 300 கோடி டொலர்கள் மதிப்புள்ள ரோவர், 222.45 மில்லியன் கி.மீ. பயணம் செய்து செவ்வாய்கிரகத்தில் தனது முதல் இயக்கத்தை நிகழ்த்தியது.

இதைத் தொடர்ந்து அங்கு அனுப்பி வைக்கப்பட்ட ஹெலிகொப்டரை பறக்கச் செய்யும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். இந்த வாரம் பறக்க விடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், தொழில்நுட்ப சிக்கலால் ஹெலிகொப்டரை பறக்க வைப்பது இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# 'ஜோன்சன்' வைரஸ் தடுப்பூசியை இடைநிறுத்துமாறு ஆலோசனை!

### அமெரிக்காவில் ஆறு பேர் பாதிப்பு; ஒருவர் பலி

நியூயோர்க், ஏப். 15

கொரோனா வைரஸ் தடுப்பூசிகளில் ஒன்றான 'ஜோன்சன் அன்ட் ஜோன்சன்' தடுப்பூசி ஏற்றுவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அமெரிக்க மருந்துக் கட்டுப்பாட்டு நிறுவனம் கேட்டிருக்கிறது.

'ஜோன்சன்' தடுப்பூசி ஏற்றத் தொடங்கிய பின்னர் கடந்த இரண்டு வார காலத்தில் ஆறு பேருக்கு இரத்தம் உறைதல் சம்பந்தமான பக்க விளைவுகள் ஏற்பட்டதை அடுத்தே ஊசியின் பாவனையை இடைநிறுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட ஆறு பேரும் 18-48 வயதுக்கு உட்பட்ட பெண்கள். அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். இன்னொருவர் ஆபத் தான கட்டத்தில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் சுமார் 70 இலட்சம் பேருக்கு இதுவரை 'ஜோன்சன்' தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. 90 இலட்சம் புட்டிகள் அமெரிக்காவுக்கு வெளியே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்ற 'நியூ யோர்க் ரைம்ஸ்' குறிப்பிட்டுள்ளது.

"தடுப்பூசியின் பாவனையை இடைநிறுத்துமாறு மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் பரிந்துரை செய்கிறோம்" என்று உணவு, மருந்து கட்டுப்பாட்டு மருத்துவ நிபுணர்கள் கூட்டாக ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஒக்ஸ்போர்ட் தயாரிப்பான அஸ்ராஸெனகா தடுப்பூசியை தொடர்ந்து அடுத்ததாக அமெரிக்காவின் ஜோன்சன் தடுப்பூசி தொடர்பாகவும் எச்சரிக்கைகள் வெளியாகுவது உலகெங்கும் வைரஸ் தடுப்பூசி போடும் நடவடிக்கைகளைக்குழப்பத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது. (ஐ)




## செப். 11இற்குள் ஆப்கானிலிருந்து சகல அமெரிக்க படைகளும் வாபஸ்!

வாஷிங்டன், ஏப். 15

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11-ஆம் திகதிக்குள் ஆப்கானிஸ்தானில் நிறுத்தப்பட்டுள்ள அனைத்து அமெரிக்க படையினரும் அழைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2001-ஆம் ஆண்டு செப்.11-இல் நியூயோர்க் இரட்டை கோபுரங்கள் பயங்கரவாதத் தாக்குதலில் தகர்க்கப்பட்டன. அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படைகள் குவிக்கப்பட்டன. அந்தத் தாக்குதலைத் திட்டமிட்ட ஒசாமா பின்லேடன் அமெரிக்க படையினரால் பாகிஸ்தானில் 2011-இல் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அப்போதிலிருந்தே ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க வீரர்கள் படிப்படியாக விலக்கிக் கொள்ளப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இரட்டை கோபுர தாக்குதல் நடைபெற்ற 20-ஆம் நினைவு தினமான வரும் செப்.11-க்குள் ஆப்கானிஸ்தானில் உள்ள அனைத்து வீரர்களும் திரும்பப்பெறப்படவுள்ளனர்.

## பிரேசில் விமானங்களுக்கு பிரான்ஸ் தடை விதித்தது!

பாரிஸ், ஏப். 15

பிரேசிலில் இருந்து வரும் அனைத்து விமானங்களுக்கும் பிரான்ஸ் தடை விதித்துள்ளது. கொரோனா வைரஸ் புதிய திரிபுகள் பரவுவதைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் பிரதமர் ஜீன் காஸ்டெக்ஸ் அறிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று நோய் மிக வேகமாக அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக பிரான்ஸ் உடனடியாக எல்லைகளை மூட வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வந்த நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொற்று நோயின் தீவிரத்துக்கு மத்தியிலும் எல்லைகளைத் தொடர்ந்து திறந்து வைத்திருக்கும் ஜனாதிபதி இமானுவல் மக்ரோனின் நடவடிக்கை குறித்து பாராளுமன்றத்தில் மிகவும் மோசமாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இதையடுத்தே, பிரேசிலில் இருந்து வரும் அனைத்து விமானங்களுக்கும் பிரான்ஸ் தடை விதித்துள்ளது. (ஐ)

# உலகின் மிக நீளமான முயலை இங்கிலாந்தில் காணவில்லை!

லண்டன், ஏப். 15

உலகின் மிக நீளமான முயல் அதன் வாழ்விடத்தில் இருந்து களவாடிச் செல்லப்பட்டுள்ளது. நான்கு அடி நீளமுடைய டேரியஸ் என்ற பெயர் கொண்ட அந்த முயல் இங்கிலாந்தின் போர்செஸ்ரெர்செயர் பகுதியில் அதன் உரிமையாளரது தோட்டத்தில் இருந்து சனிக்கிழமை இரவு அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

டேரியஸை இழந்து மிகவும் மனமுடைந்து போயுள்ளார் எனத் தெரிவித்திருக்கும் முயலின் சொந்தக்காரர் அதனைக் கண்டுபிடித்துத் தகவல் தருவோருக்கு ஆயிரம் பவுண்ட்ஸ் பரிசு தருவதாக அறிவித்துள்ளார்.

பதினொரு வயதுடைய டேரியஸை அதன் முதுமையைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பாக மீட்டுத் தருமாறும் அவர் தனது டுவிட்டர் வலைத்தளம் மூலம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

1.29 மீற்றர் நீளம் காரணமாக அந்த முயல் உலகின் மிக நீளமான முயல் என்று 2010 ஆம் ஆண்டில் கின்னஸ் உலக சாதனைப் பதிவேட்டில் இடம் பிடித்தது. இந்த முயல் அன்னெற்றி எட்வர்ட்ஸ் என்ற பெண்ணுக்குச் சொந்தமானது. (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளர் நேயம்மிக்க நேரடி கண்காணிப்பிலான கோவிட் சிகிச்சை சாத்தியமா?



மருத்துவர்
**சி. யமுனாநந்தா**



காசநோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்குவதற்காக உலக சுகாதார நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட செயல்திட்டமே நேரடிக் கண்காணிப்பிலான (Direct Observation Treatment Short Course – DOTS) ஆகும். இதன் ஐந்து அம்சங்கள்:

**1.** அரசியல் அர்ப்பணிப்பு (Political Commitment)

**2.** நோயினை இனங்காணல் (Laboratory investigation)

**3.** மேற்பார்வையிலான சிகிச்சை (Supervised Treatment)

**4.** தொடர்ச்சியான மருந்துகளின் விநியோகம் (Continuous drug supply)

**5.** கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும் (Monitoring and Evaluation)

கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அதனைச் சுலபமாகவும், அதிக செலவின்றியும் மனிதநேய அணுகுமுறையில் மேற்கொள்ள (Covid Dots) கொவிட் டொட்ஸ் செயல்திட்டங்களைச் சமூக மட்டத்தில் உருவாக்க வேண்டிய சூழல் உள்ளது.

கொவிட் தொற்றாளர்களுக்கான நேரடிக் கண்காணிப்பு சிகிச்சையில் கைக்கொள்ள வேண்டிய சில வழிமுறைகள் :

(1) கொவிட் நோயாளர்கள் அன்டியென் பரிசோதனை மூலமும் பி.சி.ஆர். பரிசோதனை மூலமும் இனங்காணப்படலாம்.

(2) கொவிட் நோயாளிக்கு உரிய சிகிச்சைகள் மருத்துவரினால் தீர்மானிக்கப்படலாம்.

(3) கொவிட் நோயாளிகளுக் கான மேற்பார் வையினை கோவிட் நோய் பற்றிய விளக் கங்களுடன் பொதுச்சுகாதார உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளலாம்.

(4) கொவிட் நோயாளர்க ளுக்கு உரிய உணவு, மருந்துகள் தொடர்ச்சியாகக் கிடைப்பதற்கு வழிவகைகள் மேற்கொள்ளப்படலாம்.

(5) கொவிட் நோயாளர்களின் குணமடைதலை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் மேற்கொள்ளலாம்.

கொவிட் நோயாளிகள் முகக்கவசம் அணிதல், தனிமையில் வாழ்தல் அல்லது பரவுவகை இல்லாத காப்புகளுடன் வாழ்தல், கைகளை கழுவுதல், கிருமிநீக்கி மூலம் பாவித்த உபகரணங்களை தொற்று நீக்குதல், மற்றவர்களுடன் சமூக இடைவெளியைப் பேணல் என்பவற்றை மேற்கொண்டு சமூகத்தில் குறிப்பாக அவர்களது வாழ்விடங்களில் வாழலாம். குறிப்பாக 10 நாட்கள் சிகிச்சைபெற்ற கோவிட் நோயாளிகளும் கோவிட் டொட்ஸ் முறையில் தத்தமது இல்லங்களுக்குச் செல்லலாம்.

எமது பிரதேச வைத்தியசாலையிலுள்ள கொவிட் டொட்ஸ் செயற்றிட்டத்தை உருவாக்கலாம் கொவிட் தொற்று அதிகரிக்கும்போது சாதாரண வைத்தியசாலைச் செயல்பாடு பாதிப்படையாது அமைவதற்கு கொவிட் தொற்றைச் சமூகமட்டத்தில் பராமரித்தல் பற்றிய சிந்தனை அவசியமானது. அதற்கு காசநோயினைக் கட்டுப்படுத்த உலக சுகாதார நிறுவனம் டொட்ஸ் செயல்திட்டத்தை கையாண்டதோ அதே போன்றதொரு சுகநலத்திட்டம் பற்றிய நோக்கு அவசியமானதாகும். ●

# ‘நஞ்சு மனிதர்கள்’ ஒரு நாள் நிஜமாக தோன்றுவார்களா?

பாரிஸிலிருந்து
**குமாரதாஸன்**



‘நஞ்சன்’ என்று மனிதர்கள் ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்வதுண்டு. ஆனால், ஒரு காலத்தில் அது நிஜமாகி விடக் கூடும் என்கின்றனர் அறிவியலாளர்கள்.

பாம்பைப் போன்று கொடிய நஞ்சை உருவாக்குவதற்குத் தேவையான மரபுப் பதார்த்தம் மனிதரிலும் ஏனைய பாலூட்டி விலங்குகளிலும் உள்ளது என்பதை ஆய்வாளர்கள் குழு ஒன்று கண்டறிந்துள்ளது. இதன் மூலம் மனிதர்களில் ஒருகாலத்தில் நச்சு உமிழ் நீர் (venomous saliva) தோன்றக்கூடும் என்று அவர்கள் ”நகைச்சுவையாக” எதிர்வு கூறியுள்ளனர்.

ஜப்பானின் ஓகினாவா அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழக (Okinawa Institute of Science and Technology Graduate University) ஆராய்ச்சிக் குழுவினர் இது தொடர்பாகப் புதிய ஆய்வுகளை நடத்தி உள்ளனர்.

பாம்புகள், சிலந்திகள், தேள்கள் போன்றவற்றால் சுரக்கப்படுகின்ற நச்சு உமிழ்நீர் அவை இரையைப் பிடிப்பதற்கு அல்லது எதிரியிடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு கொத்துதல் கடித்தல் போன்ற வழி முறைகள் ஊடாகப் பயன்படுகிறது. காட்டு வௌவால்கள் போன்ற சில பாலூட்டிகளிலும் விஷம் காணப்படுகிறது.

பாம்புகளின் விஷ சுரப்பிகளுக்கும் மனிதர்களின் ஊமிழ் நீர் சுரப்பிகளுக்கும் இடையிலான தொடர்புகளை ஆய்வு செய்ய முயன்ற அறிவியல் குழு பல புதிய தகவல்களைக் கண்டறிந்துள்ளது.

உமிழ் நீரில் விஷம் உற்பத்தியாவதற்கு அவசியமான மரபணு அடிப் படை(genetic foundation) ஊர்வன மற்றும் பாலுட்டிகள் இரண்டிலும் இருப்பதை அவர்கள் கண் டறிந்தனர்.

பாம்புகளின் நச்சுச்சுரப்பி கள், பாலூட்டிகளின் உமிழ் நீர்ச் சுரப்பிகள் இரண்டுக்கும் இடையே மூலக்கூற்று இணைப்பு (molecular link) இருப்பதை உறுதி செய்கின்ற முதலாவது ஆய்வு இதுவாகும்.

பாம்புகளின் நச்சுச் சுரப்பியில் உள்ள ‘கல்லி கிரீன்ஸ்’ (Kallikreins) என்ற ஒருவகைப் புரதத்தை மனித உமிழ் நீர் சுரப்பிகளும் உற்பத்தி செய்ய முடியும் என்பதை உறுதிப்படுத்துகின்றது இந்த ஆய்வு.

இரண்டு உயிரினங்களும் மரபு மாற்றங்களினால் வெவ்வேறு பரம்பரைகளாகப் பிரிவடைவதற்கு முன்னர் பாம்புகளின் நச்சுச் சுரப்பிகளும் பாலூட்டிகளின் உமிழ் நீர்ச் சுரப்பிகளும் பல நூறு மில்லியன் வருடங்களுக்கு முன்னர் மரபு ரீதியில் ஒன்றுடன் ஒன்று ஒத்த தன்மையைக் கொண்டிருந்திருக்கலாம் என்ற முடிவுக்கு அறிவியலாளர்கள் வந்துள்ளனர்.

“தீவிரமான நச்சுச் சுரப்பிகளே பின்னர் உமிழ் நீர்ச் சுரப்பிகளாக மாற்றமடைந்தருக்கும் என்பதை விஞ்ஞானிகள் உள்ளுணர்வாக நம்பினர். ஆனால் கோட்பாட்டு ரீதியாக அதனை நிரூபிக் கின்ற உண்மையான ஆதாரம் இதுதான்” - என்று கூறுகிறார் ஆய்வுக் குழுவில் ஒருவரான Agneesh Barua.

“சில சுற்றுச் சூழல் நிலைமைகளில் சுண்டெலிகள் அவற்றின் உமிழ் நீரில் அதிகளவு நச்சுப் புரதங்களை உற்பத்தி செய்கின்றன. இந்த மாற்றம் அவற்றின் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கடத்தப்பட்டால் சில ஆயிரம் ஆண்டுகளில் பாம்புகளைப் போன்ற நச்சு எலிகளை நாங்கள் சந்திக்க நேரிடலாம். ஆனால், இதே போன்ற மாற்றம் மனிதர்களிடையே உடனடியாக ஏற்பட்டு விடாது-” என்று ஆய்வாளர்கள் நம்பு கின்றனர்.

ஒருவேளை, பல ஆயிரம் வருடங்களின் பின்னர் அந்த உயிரியல் மாற்றம் நிகழ்ந்தால் “இப்போது நாங்கள் காண்கின்ற நச்சு மனிதர்கள் அப்போது ‘நிஜமாகி’ நம்மை தீண்டிவிடலாம். இன்றைக்கு நகைச்சுவையாகத் தெரிவது நாளை நிதர்சனமாகி விடலாம்” என்று கூறிச் சிரிக்கின்றனர் அறிவியலாளர்கள். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டை முன்னிட்டு ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள்






சித்திரை புத்தாண்டு தினமான நேற்று நல்லூர் கந்தசுவாமி கோவிலில் முருகன் வள்ளி தெய்வானை சமேதராக வெளிவீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார். ஏராளமான பக்தி அடியார்கள் விஷேட பூஜை நிகழ்வுகளில் பங்கேற்றனர்.






தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டு சிறப்பு பூசை வழிபாடுகள் திருகோணமலை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.






மட்டக்களப்பு களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தில் பிலவ வருட விஷேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.






பிறந்திருக்கும் பிலவ புத்தாண்டை மலையக மக்கள் வழிபாடுகளில் ஈடுபட்டு கொண்டாடினர். புத்தாண்டை முன்னிட்டு ஹற்றன் சிறி சிவசுப்பிரமணிய ஆலயத்தில் குருக்கள் பாலசுப்பிரமணிய சர்மா குருக்கள் தலைமையிலும், ஹற்றன் சிறிமாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலும், கொட்டகலை சிறிமுத்துமாரியம்மன் தேவஸ்தானத்திலும், விஷேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.









## ஜனாதிபதி மற்றும் பிரதமர் புதுவருட கொண்டாட்டம்

கொழும்பு,ஏப்.15

நாடளாவிய ரீதியில் தமிழ் - சிங்கள வருடப்பிறப்பு நேற்று வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது.

அந்த வகையில், வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் பல பகுதிகளிலும் தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பு கொண்டாடப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பாரியாருடன் புதுவருடப்பிறப்பை வரவேற்று கொண்டாட்டத்தை முன்னெடுத்தார்.

இலங்கை வாழ் மக்களுடன் இணைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மிரிஹானவிலுள்ள தனது இல்லத்தில் புத்தாண்டு சம்பிரதாயங்களை நிறைவேற்றினார்.

ஜனாதிபதியும் அவரது பாரியார் அயோமா ராஜபக்ஷவும் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பாரம்பரிய சம்பிரதாயங்களை நிறைவேற்றி புத்தாண்டு தினத்தைக் கொண்டாடினர்.

ஜனாதிபதியும் பாரியார் அயோமா ராஜபக்ஷவும் சுபநேரத்தில் தங்கள் வீட்டு வளாகத்தில் மரக்கன்றொன்றை நட்டினர்.

இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகள், மருமக்கள் உள்ளிட்ட உறவினர்களுடன் புதுவருடப் பிறப்பை வரவேற்று கொண்டாட்டத்தில் ஈடுபட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஐ.பி.எல். இருபது - 20 போட்டி:

# பரபரப்பான ஆட்டம்: வென்றது பெங்களூர்!

சென்னை, ஏப். 15

பரபரப்பான ஆட்டத்தில், இறுதி ஓவரில் 6 ஓட்டங்களால் வெற்றி பெற்றது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரின் ஆறாவது போட்டியில் நேற்று பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ், ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணிகள் மோதின.

சென்னையில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஹைதராபாத் அணியின் தலைவர் வோர்ணர் முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தார்.

இதனால், முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணிக்கு விராட் கோலி தேவ்தத் படிக்கல் இணை தொடக்கம் கொடுத்தது. மூன்றாவது ஓவரில் படிக்கல் 11 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் புவனேஷ்வர் குமாரின் பந்தில் வீழ்ந்தார்.

அடுத்து வந்த ஷஹ்பாஸ் அஹமட் 14 ஓட்டங்களுடன் வெளியேறினார். மறுமுனையில் கோலி நிதானித்து ஆடினார். அடுத்து வந்த அதிரடி வீரர் மக்ஸ்வெல் தனது வழமையான பாணியிலேயே ஆடினார்.

இந்நிலையில் 29 பந்துகளில் 4 பௌண்ட்ரிகளுடன் 33 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஹோல்டரின் பந்தில் சங்கரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த வீரர்கள் ஒரிலக்க ஓட்டத்தையே பெற்றனர். எனினும், மக்ஸ்வெல் 41 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 59 ஓட்டங்களை குவித்தார்.

இதனால், 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 149 ஓட்டங்களை பெங்களூர் அணி பெற்றது.

ஹைதராபாத் அணியின் பந்துவீச்சில், ஜசன் ஹோல்டர் 3, ரஷீத் கான் 2 விக்கெட்களையும், புவனேஷ்வர் குமார், நதீம், நடராஜன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது ஹைதராபாத் அணி. விரித்திமன் சஹா, டேவிட் வோர்ணர் ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களம் புகுந்தனர்.




சஹா 9 பந்துகளை வீணடித்து வெறுமனே ஒரு ஓட்டத்தை மட்டும் பெற்று ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வோர்ணருடன் மனிஷ் பண்டே இணைந்து பொறுமையாக ஆடினார். எனினும் வோர்ணர் 7 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 54 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

மனிஷ் பண்டே 2 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களை அவர் அடித்தபோதும், பந்துகளை வீணடித்தார். 39 பந்துகளில் அவர் 38 ஓட்டங்களை எடுத்திருந்தார். பின்னர் வந்த வீரர்கள் பந்துகளை வீணாக்கினர். ஆனால், அவர்களால் இரு இலக்க ஓட்டத்தை நெருங்கவே முடியவில்லை. ரஷீத்கான் மட்டும் 9 பந்துகளில் 17 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

எனினும், வெற்றியை அண்மித்தது ஹைதராபாத் அணி. இறுதி ஓவரில் 15 ஓட்டங்கள் பெற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. இதனால், இறுதி ஓவர் பரபரப்பாக அமைந்தது. அந்த ஓவரை ஹர்சல் பட்டேல் வீசினார்.

அதில், புவனேஷ்வர் குமார் ஓர் ஓட்டத்தைப் பெற்றார். அடுத்த பந்தில் 2 ஓட்டங்களை ரஷீத் கான் பெற்றார். மூன்றாவது பந்து முறையற்ற பந்தாக வீசப்பட்டு உதிரியாக 4 ஓட்டங்களும் கிடைக்க ஆட்டம் மேலும் சூடு பிடித்தது.

ஆனால், அடுத்த 3 பந்துகளையும் கனகச்சிதமாக வீசினார் பட்டேல், முதல் பந்தில் ஓட்டம் பெற முடியவில்லை. நான்காவது பந்தில் ரஷீத்கான் ரன் அவுட் ஆனார். ஐந்தாவது பந்திலும் நதீம் ஓட்டம் எதனையும் பெறாமல் வெளியேறினார்.

ஆறாவது பந்தில் ஓர் ஓட்டத்தை புவனேஷ்வர் குமார் பெற்றார். 20ஆவது ஓவரின் முடிவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 143 ஓட்டங்களையே பெற்றது ஹைதராபாத் அணி.

பெங்களூரின் பந்துவீச்சில் அஹமட் 3 விக்கெட்களையும், சிராஜ், பட்டேல் தலா 2 விக்கெட்களையும், ஜேமிசன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக கிளென் மக்ஸ்வெல் தெரிவானார். (ஐ)



## ஐ.சி.சி. கிரிக்கெட் தரவரிசை: இலங்கையின் மூவருக்கு இடம்

டுபாய், ஏப். 15

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபது - 20 போட்டியின் வீரர்களுக்கான தரவரிசையில் இலங்கை அணியின் மூவர் இடம்பிடித்துள்ளனர்.

இதன்படி, லக்சான் சந்தகன் 9ஆவது இடத்திலும், வனிந்து ஹசரங்க 10ஆவது இடத்திலும் உள்ளனர்.

இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணியின் தலைவியான சமரி அத்தபத்து பெண்களுக்கான சர்வதேச இருபதுக்கு 20 இன் சகலதுறை தரப்படுத்தலில் 265 புள்ளிகளுடன் 6 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இதேவேளை, ஐ.சி.சி.யின் டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் தரவரிசையில் இலங்கை வீரர்கள் எவரும் இடம்பிடிக்கவில்லை. (ஐ)

## பாபர் அஸாம் அதிரடி சதம்! பாகிஸ்தான் அபார வெற்றி!!

செஞ்சூரியன், ஏப். 15

பாபர் அஸாமின் அதிரடி சதம் கைகொடுக்க தென்னாபிரிக்காவை 9 விக்கெட்களால் வெற்றி கொண்டது பாகிஸ்தான்.

தென்னாபிரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் அணி தற்போது 4 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடி வருகின்றது. முன்னர் நடந்த இரு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பதிவு செய்த நிலையில், மூன்றாவது போட்டி நேற்று நடந்தது.

செஞ்சூரியனில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு ஜன்னெமன் மலன், எய்டன் மார்க்ரம் இணை தொடக்கம் கொடுத்தது. இருவரும் சிறப்பான ஆரம்ப ஆட்டத்தை ஏற்படுத்தினர்.

மார்க்ரம் 25 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். தொடர்ந்து அதிரடியில் மிரட்டிய மார்க்ரம் 31 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 4 சிக்ஸர்களுடன் 63 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

எனினும், மறுமுனையில் நின்ற மலன் 36 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். இறுதியில், அவர் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 55 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த ஜோர்ஜ் லிண்ட் 22, கிளாசன் 15, அன்டில் பெஹ்லுக்வாயோ 11 என்று ஓரளவுக்கு மிரட்டினார். இதனால், 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 203 ஓட்டங்களை எடுத்தது தென்னாபிரிக்க அணி.

வான் டெர் டுசென் மட்டும் 20 பந்துகளில் 34 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காதிருந்தார்.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் முஹமட் நவாஸ் 2 விக்கெட்களையும், ஷா அப்ரிடி, ஹசன் அலி, பஹீம் அஷ்ரப் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு தொடக்கம் கொடுத்தனர் முஹமட் றிஸ்வான், அணித் தலைவர் பாபர் அஸாம்.

இருவரும் மிகச் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர். ஆரம்பம் முதலே இருவரும் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

அபாரமாக ஆடிய பாபர் அஸாம் 15 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்கள் விளாசிய அவர் 59 பந்துகளில் 122 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். இருபது - 20 கிரிக்கெட்டில் பாபர் அஸாமின் முதல் சதம் இதுவே.

18 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்த பாகிஸ்தான் அணி 205 ஓட்டங்களைக் குவித்து, 9 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

றிஸ்வான் 47 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 73 ஓட்டங்களுடனும், பஹார் ஷாமான் 2 பந்துகளில் 8 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காதிருந்தனர்.

தென்னாபிரிக்காவின் சார்பில் பந்து வீசிய வில்லியம்ஸ் 1 ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக 122 ஓட்டங்களை குவித்த பாபர் அஸாம் தெரிவானார். (ஐ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**
1.00 மணி : நலம்தானா - மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படத்திலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்




7.30 மணி : பல்துறைக் கருவூலம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு - இசை நிகழ்ச்சி



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

## ஐ ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் சங்கரத்தை குளத்தடி நாகபூஷனி அம்பாள் கோவில் திருவிழா
10.00 மணி : பக்தி பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வரசித்தி விநாயகர் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
9.00 மணி : யாழ்ப்பாணம் சங்கரத்தை குளத்தடி நாகபூஷனி அம்பாள் கோவில் திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடல்கள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org